மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

...வி 2 | 1 - 9 - 53 | இதழ்...

விடுதலைக்கவி பெட்டோபி

★

அலெக்சாண்டர் பெட்டோபி (1823—1849) ஹங்கேரிய நாட்டின் விடுதலைக் கவிஞன், நாடோடி நடிகன், எழுச்சியூட்டிய எழுத்தாளன், புரட்சி தூவிய பேச்சாளன், தாயகத்தை மீட்க நடந்த போரில் தன் உயிரைக் காணிக்கையாகத் தந்த மாவீரன்.

(வாழ்க்கை வரலாறு 22-ம் பக்கம் பார்க்க)

★

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா

Best copy available.

உலகம் சுற்றிய முதல்வர்

கோலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததற்குப் பிறகு, புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற நல்லுணர்ச்சி, மேற்கு ஐரோப்பாக் கண்டத்தில், பலர் உள்ளத்தில் பொங்கி எழுந்தது. அடுத்த நூற்றாண்டான 16-வது நூற்றாண்டு முழுவதும், நாடு காணும் புது முயற்சிக்குப் பேர்போனது என்னலாம். நாடு கண்டுபிடிக்கும் படைகள் திரண்டெழுந்து, உலகின் நாலாபக்கங்களிலும், தாவித் தாவிச் சென்று, புதியனபல கண்டுபிடித்தன.

கி. பி. 1497-ம் ஆண்டில், அமெரிகோ என்பான், தென் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு முன்னரே, வாஸ்கோ ட காமா என்ற போர்த்துகேசிய மாலுமி, இந்தியாவைக் கண்டுபிடிக்கவேண்டி, தென் ஆப்பிரிக்காவின் முனையான நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு, கிழக்காப்பிரிக்கா கடற்கரையோரமாயுள்ள ஜான்சிபார் தீவை வந்தடைந்தான். அங்கிருந்து அராபியநாட்டுக் கப்பற்படை வீரன் ஒருவனின் துணையால், இந்தியாவைக் கண்டான்; மலையாளக் கடற்கரையிலுள்ள கள்ளிக்கோட்டையில் வந்திறங்கினான். அதற்குப் பிறகு சில ஆண்டுகளுக்குள், வேறு சில போர்த்துகேசிய மாலுமிகள், ஜாவாவையும், மற்றும் பிற கிழக்கிந்திய தீவுகளையும் கண்டு பிடித்தனர்.

கி. பி. 1519-ம் ஆண்டிலிருந்து, 1522-ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலம், கடற்பயண வரலாற்றில், மிகக் குறிப்பிடத்தக்கக் காலமாகக் கருதப்படும். மாகெலான் என்ற போர்த்துகேசிய மாலுமி, ஸ்பெயின் நாட்டு அரசனின் ஆதரவிலும், உதவியிலும் நாடு கண்டுபிடிப்புப் படையொன்றைத் திரட்டிக்கொண்டு, தென் அமெரிக்காவின் தெற்குப் பகுதி நோக்கிக் கிளம்பினான். பல தொல்லைகளையும், துயரங்களையும் தாங்கிக்கொண்டு, கரும் வழிகள் பலவற்றைக் கடந்து, பசிபிக் மாபெருங் கடலில் நுழைந்தான். அதற்கு முன்பே ஸ்பெயின் நாட்டு நாடுகண்டுபிடிப்பாளர்கள், பனமாவிலுள்ள இஸ்மத்ஸ் மலைக் குன்றுகளின் உச்சியில் நின்று, பசிபிக் பெருங்கடலைப் பார்த்திருக்கிறார்கள். ஆனால், பசிபிக் கடலில் முதன்முதல் கண்டுபிடிக்க நுழைந்தவன் மாகெலானேயாவான். அவன் எங்கும் நின்றுவிடாமல் மேலும் மேலும் அக்கடலின் நடுவே போய்க்கொண்டேயிருந்தான்.

மாகெலானும் அவனோடு வந்தவர்களும், கரை எதும் காணாமல், தொண்ணூற்றெட்டு நாட்கள், பசிபிக் கடலிலேயே மேற்கு நோக்கிச் சென்றுகொண்டேயிருந்திருக்கிறார்கள். இறுதியாக 1521-ம் ஆண்டில், அவர்கள் ஒரு சிறு தீவுக் கூட்டத்தை வந்தடைந்தனர். அதற்கு லாட்ரோன்ஸ் தீவுகள் என்று பெயரிட்டனர். லாட்ரோன்ஸ் தீவுகள் என்றால், கொள்ளைக்காரர்களின் தீவுகள் என்று பெயர் பெறுமாம். அந்தத் தீவிலுள்ளவர்கள், கப்பலில் வந்தவர்களிடம் புதியபுதிய ஆடை, அணி, பொருள் வகைகளைக்கண்டு, அவைகளை விரும்பிக் கொள்ளையடித்திருக்கவேண்டும், அதனால்தான் அப்பெயர் அந்தத் தீவுகளுக்கு இடப்பட்டிருக்கிறது என்று வரலாற்றாசிரியர்கள் ஊகிக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் பிலிப்பைன் தீவுகளைக் கண்டறிந்திருக்கிறார்கள். ஸ்பெயின் நாட்டு மன்னனின் நினைவின் அறிகுறியாக, அந்தத் தீவுகளுக்கு பிலிப்பைன்ஸ் என்ற பெயரிட்டனர். பிலிப்பைன் தீவின் மக்களுக்கும், கப்பலில் வந்த போர்த்துகேசியர்க்கும் யாது காரணமாகவோ சண்டை ஏற்பட்டது; அதில் தலைவனான மாகெலானும் மற்றும் பல மாலுமிகளும் உயிரிழந்தனர். மீதமுள்ள போர்த்துகேசியர்கள், தங்கள் தாயகத்திற்குச் செல்ல விரும்பி, நேரே வழியமைத்துக்கொண்டனர். அதாவது, இந்துப் பெருங்கடலைத்தாண்டி, தென் ஆப்பிரிக்காவைச் சுற்றிக்கொண்டு பிறகு வடக்குப்புறமாகத் திரும்பி ஸ்பெயின் சென்று சேரத் திட்டமிட்டனர். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திட்டமிட்டுக் கிளம்பிய ஐந்து கப்பல்களில், ஒரே ஒரு கப்பல் மட்டுந்தான் திரும்ப ஸ்பெயின் வந்தடைந்தது. மொத்தம் கிளம்பிய இருநூற்று எண்பது பேர்களில், முப்பத்தோர் பேர்கள்தாம் தலைவனில்லாமல் தாயகம் திரும்பினார்களாம். அவர்கள் வந்து சேர்ந்த கப்பல் விக்டோரியா (வெற்றி) என்ற பெயருடைய கப்பலாகும். அந்த 31 பேர்கள் தாம் முதன்முதல் உலகம் சுற்றிவந்த முதலவராவர்!

1-9-53 செவ்வாய்க்கிழமை

அலட்சியமல்ல அவசியம்

சட்டத்தை மீறுபவர்களுக்கும், சட்டத்தைமதியாதவர்களுக்கும் உள்ள வேறுபாட்டை அறிஞர் அண்ணா அவர்கள், சென்னை மாநில நீதிமன்றத்தின் குற்றக் கூண்டிலே நிறுத்தப்பட்டபோது வெளியிட்ட அறிக்கையில் தெளிவுபட விளக்கிக்காட்டியுள்ளார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தார் தக்க காரண காரியங்கள் காட்டி, அமைதி, கட்டுப்பாடு, ஒழுங்கு, கண்ணியம், நீதி, நேர்மை, காலத்தின் தேவை ஆகியவற்றின் அடிப்படையிலே நின்று, சட்டத்தை மீறியவர்கள் என்ற பெயருக்குச் சிறிதளவில் பொருந்தி வருபவர்களாகலாமே யொழிய, சட்டத்தை மதியாதவர்கள் என்ற குற்றச்சாட்டுக்குச் சிறிதும் ஆளானவர்களல்லர்.

உலகில், அடிமைத் தளையால் கட்டப்பட்டு, அடக்குமுறை ஆட்சியின்கீழ்ச் சிக்கித் தவித்த நாடுகளில், மக்களுக்கு வாழ்வளிக்க முன்வந்த விடுதலை வீரர்களெல்லாம், ஏற்றபொழுதில், ஏற்றஅளவில், ஏற்றதன்மையில் சட்டத்தை மீறிக்காட்டும் அரும்பணியைச் செய்திருக்கிறார்கள்; அப்படிப்பட்டோரின் பணி நாட்டையும், மக்களையும் வாழவைத்திருக்கிறது. கொடுங்கோலர்களின் ஆட்சியில், விடுதலை வீரர்களின் கடமை அதுவாகத்தான் இருந்துவந்துள்ளது.

சட்டத்தை மதியாதவர்கள் நாட்டிற்கும், சமூகத்திற்கும் தீங்கிழைக்கும் கொடியவர்கள்; தங்கள் சுயநலத்துக்காக எங்கும், எப்பொழுதும், எதற்கும் சட்டத்தை மதியாமலேயே, தங்களுக்கென்று 'தனிச் சட்டங்கள்' ஏற்படுத்திக்கொண்டு வாழ்வார்கள்; அவர்களுக்குக் கொள்கை, கோட்பாடு, திட்டம், தெளிவு ஏதும் தேவையில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தார், அத்தகையோரின் செய்கையை என்றும் கண்டிப்பவர்கள்; எந்த ஆட்சியிலும் அப்படிப்பட்ட செயலுக்கு இடங்கொடுக்கக் கூடாது என்று எண்ணுபவர்கள். கழகத்தார் சட்டத்திற்குக் கொடுக்கவேண்டிய முழுமதிப்பையும் கொடுப்பவர்கள்.

ஆனால். இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன், கெடுபா ரின்றிக் கெடும் என்ற வள்ளுவப் பெருந்தகையாரின் கருத்துக்கு ஒப்ப, அத்துமீறி அடக்குமுறையைக் கையாளும் ஆட்சிக்கு அறிவுறுத்தவும், ஆட்சியாளரின் ஆணவப்போக்கை அடக்கவும், இடம் பொருள் ஏவலுக்கேற்ற சில குறிப்பிட்ட சட்டங்களை அமைதியான முறையில் மீறிக்காட்டவேண்டிய அவசியம், தாயகத்தின் விடுதலைக்குப் பாடுபடும் ஒவ்வொரு இயக்கத்துக்கும் ஏற்பட்டுவிடுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தார் நாட்டின், சமூகத்தின் நல்வாழ்வுக்கான அவசியத்திற்காகச் சட்டத்தை மீறவேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கலாமே, யொழிய, சட்டத்தை மதியாமல் நடந்தார்கள் என்றக் குற்றச்சாட்டை, யாரும் எப்பொழுதும், எங்கும் கூறிவிட முடியாது;

சட்டத்தை எதுக்கு மீறலாம், எப்பொழுது மீறலாம் என்பதில் வேண்டுமானால் இன்றைய ஆட்சியாளர்கள், தங்கள் கருத்து, கொள்கைக்கேற்ப கூறமுன்வரலாமே யொழிய, சட்டத்தை மீறுவது என்பதே தவறு என்று சொல்ல முடியாது.

அவசியமானபொழுது, அளவானவகையில், அமைதியான முறையில் சட்டம் மீறுவது சரியா தவறு என்று தீர்ப்பளிக்கவேண்டியது, பொதுமக்கள் மன்றமேயாகும்; அதைத்தவிர வேறு யார் சொல்வதும் ஏற்கப்படவேண்டிய அவசியமில்லை. பொதுமக்கள் மன்றத்தின் தீர்ப்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் நாளுக்குநாள் திரும்பிவருவதே, கழகத்தின் நடவடிக்கைகள் சரி என்பதற்குப் போதுமான சான்றாகும்.

உலகிலே விடுதலை வீரர்கள் சட்டங்களை மீறியிருக்கிறார்கள்; அலட்சிய போக்கிலே அல்ல, அவசிய நோக்கிலே.

★ பந்தயம் ★

முரட்டுத்தனத்துக்கும், பிடிவாத குணத்துக்கும் செல்லப்பன் அந்த ஊரில் பெயர் பெற்று விளங்கினான். சிறு வயதிலிருந்தே வேடிக்கை விளையாட்டுக்கும், உண்மையாகச் செய்வதற்கும், வித்தியாசமின்றி அவன் எதுவும் செய்வான். அவனுக்குப் பக்க துணையாக இருந்தவன், அவனுடைய பக்கத்துவீட்டிலிருக்கும் எல்லப்பன் ஆவான். இருவரும் நண்பர்கள் என்பதுடன் நெருங்கிய உறவினர்களுங் கூட. இருவரும் ஒன்றுசேர்ந்து சுற்றுகிறார்கள் என்றால் ஏதோ ஆபத்து என்றுதான் அர்த்தம் இருவரில் செல்லப்பன் கொஞ்சம் முரடன், திடீரென்று எதையும் செய்துவிடுவான். எல்லப்பன் கொஞ்சம் யூகத்துடன் நடக்கப் பார்ப்பான். ஆனால் அவர்கள் எதுவும் சொன்ன வேலையைச் செய்துமுடித்ததில்லை. ஏதாவதொன்றை ஆரம்பித்து, எங்கேயாவது கொண்டுபோய் முடிப்பார்கள். சில சமயங்களில் இருவரும் சேர்ந்து விளையாட்டு என்று ஆரம்பிப்பது, பெரிய விபரீதத்தில் போய் முடிந்துவிடுவதுண்டு.

ஒரு சமயம், அந்த ஊர்க் கோயிலின் கோபுரம் எவ்வளவு உயரமானது, அதில் யாராவது ஏறமுடியுமா என்ற தர்க்கம் சிறுபையன்களுக்குள் வந்தது. செல்லப்பன் வெகுநேரம் பேசிக்கொண்டிருக்கவில்லை. அந்த விஷயத்தைப் பேசி, ஒரு முடிவு காணாமல் ஒத்திப் போட்டுவிட்டு வேறு விளையாட்டில் மற்ற பையன்கள் ஈடுபட்டிருந்தபொழுது, கோபுரத்தின்மீது செல்லப்பன் உண்மையாகவே ஏற ஆரம்பித்துவிட்டான். பையன்கள் எவ்வளவு கூச்சல் போட்டும் செல்லப்பன் கேட்காமல், ஒவ்வொரு பொம்மையாக, விமானமாகப் பிடித்து ஏறிக்கொண்டிருந்தான். இதற்குள் அந்த வேடிக்கையைப்பார்க்க ஊர் ஜனங்கள் கூடிவிட்டார்கள். செல்லப்பனின் தந்தை முருகேசம்பிள்ளை—அவர்தான் அந்தக் கோயில் தர்மகர்த்தா, அவரும் வந்துவிட்டார். யார் எவ்வளவு கூப்பாடுபோட்டும் பயனில்லை. கோபுரத்தின் உச்சியில் போய் செல்லப்பன் உட்கார்ந்துவிட்டான். அத்துடன் நின்றிருந்தால் நன்றாயிருந்திருக்கும். திரும்பி வரும்பொழுது, அந்த உச்சியிலிருந்த கலசத்தையும் உடைத்துப் போட்டுவிட்டான்.

கீழே இறங்கி வந்ததும், முருகேசம்பிள்ளை அவனுக்கு முதுகில் நன்றாக இரண்டு அடிகள் கொடுத்து, "ஏண்டா! கோபுரத்தின்மீது ஏறினாய், குரங்கே!" என்று கேட்டார்.

"அந்தக் கோபுரத்தின்மீது யாரும் ஏறமுடியாதென்று எல்லப்பன்தான் சொன்னான்" என்று செல்லப்பன் பதில் தந்தான்.

செல்லப்பனுக்குக் கிடைத்த அளவு வெகுமதிகள் எல்லப்பனுக்கும் கிடைத்தன பின்பு கலசம் கீழே விழுந்துபோனதற்காக, அதைத் திரும்ப உயரேவைத்து, ஒரு சிறு கும்பாபிஷேகமும் முருகேசப்பிள்ளை செய்யவேண்டி வந்தது.

கொஞ்சம் பெரியவர்களானதும், செல்லப்பனும், எல்லப்பனும் அந்த ஊரில் இருந்த பொழுதுபோக்குச் சங்கத்தில் சேர்ந்து, அதன் ஆதரவில் நடக்கும் நாடகங்களில் பங்கேற்று, நடித்தார்கள். இரவு பகல் ஓழிவின்றி, அதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்ததால், இவர்கள் நடத்திய நாடகங்கள் நன்றாக அமைந்திருந்தன. அதிலும் செல்லப்பனும், எல்லப்பனும் நடிக்கும் பாகங்கள் அப்படியே வாழ்க்கையிலிருப்பவைகளைப்போலிருந்தன. உண்மையிலேயே, தொழில் முறையில் நடிப்பவர்கள்கூடக் கண்டு பொறாமைப்படும் அளவுக்கு அவர்களுடைய நடிப்பு இருந்தது. அந்த இரண்டுபேரில்—செல்லப்பன், எல்லப்பன் இந்த இரண்டுபேருக்குள்ளும் யார் சிறந்த நடிகன் என்று யாரும் கண்டுபிடிக்கமுடியாமலிருந்தது. எல்லப்பன் ஒரு சீனில் நன்றாக நடித்தானென்றால், அடுத்தபடி செல்லப்பன் வந்தால் அது மறந்துபோய்விடும். செல்லப்

பன் ஒரு பாகத்தில் பேரெடுத்தால், எல்லப்பன் அதை மிஞ்சி வேருெரு பாகத்தில் நடித்து வந்தான். இப்படி உள்ளூர இருவருக்கும் போட்டிவந்தது.

ஒருநாள், புதிய நாடகமொன்றின் ஒத்திகை நடந்தது. அது முடிந்ததும், செல்லப்பனும், எல்லப்பனும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். நாடகங்களின் வகை, நடிப்பின் திறம், புகழ்பெற்ற நடிகர்கள் இப்படிப் பொதுப்படையாக ஆரம்பித்தபேச்சு, அவர்கள் ஒத்திகை பார்த்துக்கொண்டிருக்கும் நாடகத்தைப்பற்றி திரும்பியது.

"நீ அந்தப்பாகத்தைச் சரியாக நடிக்கவில்லை. காதுங்காதும் வைத்ததுமாதிரி பேசுகிருய். கொஞ்சம் சத்தம் போட்டுப் பேசனும்" என்று எல்லப்பனின் நடிப்புபற்றி, செல்லப்பன் குறைசொன்னுன்.

எல்லப்பனுக்குக் கோபம் வந்தது. "அந்தப் பாகத்துக்கு அந்த அளவுதான் நடிக்கவேண்டும். மிகச் சோகமான கட்டம். மெதுவாகப் பேசனும். ஜனங்கள் காதில் விழுவேண்டுமென்பதற்காக நான் சத்தம்போட்டுப் பேசமாட்டேன். நான் மெதுவாகப் பேசுவதை, அவர்கள் காதுகொடுத்துக் கேட்கவேண்டும். இல்லாவிட்டால், உன்னைப்போல் கொட்டகை விழுந்துவிடும்படி சத்தம்போட்டுப் பேசுவதா, என்ன?"

நாடகபாணியில் ஒரு சிரிப்பு சிரித்துக்கொண்டு, செல்லப்பன் நிமிர்ந்து உட்கார்ந்தான். "நான் போடுகிறது சத்தமா? இந்த பாகத்துக்கு என்னைத்தவிர வேறு ஆள் கிடையாதென, டைரக்டரே சொல்லிக்கொண்டிருக்கிருர்," என்று செல்லப்பன் பெருமைப்பட்டான்.

"உன்னிடம் மட்டுமென்ன, எல்லோரிடமும் டைரக்டர் அப்படித்தான் சொல்லிக்கொண்டிருக்கிருர். அது நம்முடைய திறமையை விளக்கவல்ல, அதன்மூலம், அந்தந்த பாகத்திற்குத் தகுந்த ஆளைப்பொறுக்கும் திறமை தனக்கிருக்கிறதென்று டைரக்டர் சொல்லிக்கொள்ளுகிருர். அவர் சொல்லுகிறதை அப்படியே வைத்துக்கொண்டு எதுவும் நிச்சயமாகச் சொல்லமுடியாது," என்று எல்லப்பன் விளக்கந்தந்தான்.

"இதோ பார்! நாடக மேடையில் மட்டுமல்ல, சாதாரணமாக நான் நடித்துக்காட்டினுல்கூட, அதைக்கண்டு எல்லோரும் அப்படியே நம்பிவிடுவார்கள்," என்று செல்லப்பன் சொன்னுன்.

"அப்படியா!"

செல்லப்பனுக்குக் கோபம் வந்தது. "வேடிக்கைக்கல்ல. நாளையே நான் இதைச் செய்து காட்டுகிறேன். நான் வெற்றிபெற்ருல் நீ எனக்கு பத்து ரூபாய் தரவேண்டும். தோற்ருல், நான் உனக்குப் பத்து ரூபாய் தந்துவிடுகிறேன். இதைப்பற்றி என்ன நடந்தாலும், நீ யாரிடமும் ஒன்றும் சொல்லக்கூடாது. அவ்வளவுதான்." படபடவென்று பேசிவிட்டு, செல்லப்பன் போய்விட்டான். அவன் சொன்னது முழுவதும் விளங்காமல், எல்லப்பன் உட்கார்ந்திருந்தான்.

மறுநாள் காலை மணி எட்டு இருக்கும். முகத்தைக் கழுவிக்கொண்டு, வீட்டிற்குள் முருகேசம்பிள்ளை நுழைந்தபொழுது அவர் கண்ட காட்சி, திடுக்கிடக்கூடியதாயிருந்தது. மாடிப்படிக்கட்டில், தலைமயிரைப் பறக்கவிட்டு, சட்டையைக் கிழித்துக்கொண்டு செல்லப்பன் நின்றுகொண்டிருந்தான்.

"ஏய், செல்லப்பா! என்னடா கோலமிது?" என்று முருகேசம்பிள்ளை பக்கத்தில் போனுர்.

செல்லப்பன் திரும்பிப்பார்த்து, கண்களை உருட்டிக், கடகடவெனச் சிரித்தான்; பின் அங்கிருந்து இரண்டு தாவுதலில், முருகேசம்பிள்ளை அருகே வந்துசேர்ந்தான். "இந்த அரண்மனைக்குள் நுழைந்த கள்வனே, நீ யார்? எப்படி இங்கு வந்தாய், சொல்!" என்று உறுமினுன்.

முருகேசம்பிள்ளைக்கு ஒன்றும் புரியவில்லை. "அரண்மனையா? திருடனு? ஒன்றும் விளங்கவில்லையே! என்னடா, இந்தப்பேச்சு?"

செல்லப்பன், பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டு, தரையில் காலால் தட்டிக்கொண்டு "இந்த இராஜகுமாரனைப் பார்த்து, நீ அடே என்று சொன்னுயே! போய்விடு! தப்பிப் பிழைத்தாய்! எதுக்குல ராஜ......." என்று பாடிக்கொண்டு செல்லப்பன் வேருெரு பக்கம் ராஜநடை போட்டு நடந்தான்.

"என்னைத் தெரியவில்லை, உன்னுடைய அப்பன்தான்" என்று முருகேசம்பிள்ளை அவனுக்குப் பின்னுல் போனுர். கையால் அசைத்

துப் போகச்சொல்லிவிட்டு, செல்லப்பன் பாடிக்கொண்டிருந்தான்.

தன் மகனுக்கு ஏதோ சித்தம் கலங்கிவிட்டதென முருகேசம் பிள்ளை முடிவுகட்டி, "ஐயோ! அன்னம்! வந்து உன் மகனைப்பார்." என்று தன் மனைவியைக் கூப்பிட்டார்.

அன்னம் வந்ததும், "இது யாரு!" என்று அவளைப் பார்த்து செல்லப்பன் கேட்டான்.

"ஐயோ!" என்று அவனைப் பார்த்தபடியே அன்னம்மாள் கீழே உட்கார்ந்துவிட்டாள்.

செல்லப்பனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாம் ' என்ற செய்தி ஊரெங்கும் பரவி, முருகேசம் பிள்ளையின் வீட்டைச் சுற்றி, வேடிக்கை பார்க்கும் கூட்டம் கூடிவிட்டது. பக்கத்தில் போய்ப் பார்த்தவர்களெல்லாம், செல்லப்பன் செய்யும் கோணங்கிச் சேஷ்டைகளைப் பார்த்ததும், "சரியான பைத்தியம் தான்" என்று முடிவுசெய்தார்கள். ஏரிக்கரை முனியிலிருந்து, கைகூடாத காதல்வரைப் பல காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

வழக்கம்போல் காலையில் வரவேண்டிய செல்லப்பனைக் காணாததால், எல்லப்பன் தேடிவந்தான். வீட்டின்முன் கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்ததும் "ஏதோ ஆபத்து" என எல்லப்பன் பயந்துவிட்டான். உள்ளே போய்ப் பார்த்தால், அசல் பைத்தியக்காரன் பார்த்தால்கூட பயப்படும் விதத்தில் செல்லப்பனின் பைத்தியம் இருந்தது. முதல் நாள் கூறிய சபதம் இவ்வளவு தூரத்துக்கு வருமென்று எல்லப்பன் எதிர்பார்க்கவில்லை. எல்லப்பன் வந்ததைப் பார்த்ததும, செல்லப்பன் முன்னைவிட அதிகமாகப் பாட்டுப் பாடுவது, சத்தம்போடுவது, சிரிப்பது, கண்ணை உருட்டுவது, பக்கத்தில் வந்தவர்களை மிரட்டுவதுமாக இருந்தான். இதற்குள், வைத்தியர், ஜோதிடர், மந்திரிப்பவன், பூசைபோடுபவன், எல்லோரும் தாங்கள் கற்ற வித்தையையெல்லாம் காண்பிக்க ஆரம்பித்தார்கள். கடைசியாகக் கூட்டத்தைக் கலைத்துப் போகச்சொல்லிவிட்டு, செல்லப்பனை மாத்திரம் தனியாக வைத்து, அவன் முகத்தில் தண்ணீர் தெளித்து, படுக்கவைத்தார். அவனும் அடங்கி படுத்துவிட்டான்.

மறுபடியும் எல்லப்பன் வந்தபொழுது, செல்லப்பன் மட்டும் தனியாக இருந்தான். செல்லப்பன் வெற்றிப்புன்னகையுடன், "எப்படி, என் நடிப்பு! இப்பொழுதாவது ஒத்துக்கொள்கிறாயா, இல்லையா? போட்டியில் நான் ஜெயித்துவிட்டேன். போடு, பத்து ரூபாய் பணத்தை!" என்றான்.

"ஏண்டா, இப்படி மற்றவர்களையெல்லாம் பயமுறுத்திவிட்டாய்."

"பந்தயம் வைத்தேன், ஜெயித்துக் காட்டினேன். அவ்வளவுதான்." என்று செல்லப்பன் எழுந்தான்.

அதற்குள் முருகேசப்பிள்ளை வந்துவிட்டார். செல்லப்பன் பழையபடி பைத்தியமகிவிட்டான். "எட்டிப்போ! எட்டிப்போ! கொட்டாப்புளியைப் போடுவேன்" என்று பக்கத்திலிருந்த ஒரு மரக்கட்டையைத் தூக்கி எறிந்தான். வேடிக்கையாக எறிந்த கட்டை, எல்லப்பன்மீது நன்றாகப் பட்டுவிட்டது. அடி தாளாமல், எல்லப்பன் தள்ளாடி, கீழே விழுந்துவிட்டான். செல்லப்பன் மிகவும் பதறிப்போய்ப், பக்கத்தில் சென்று, எல்லப்பனைத் தூக்கி உட்காரவைத்தான். எல்லப்பனின் மண்டையில் அடிபட்டு, இரத்தம் வழிந்து, சட்டையை நனைத்தது. வலி தாங்காமல், மூச்சுத்தடுமாறி, கண்கள் சோர்ந்து, எல்லப்பன் தலையைச் சாய்த்து விழுந்துவிட்டான்.

எதிர்பாராதவிதமாய் நிகழ்ந்தது கண்டு, செல்லப்பன் செயலற்றுவிட்டான். "ஐயோ! பைத்தியக்காரனைப்போல நடித்து, இவனை அனியாயமாகக் கொன்றுவிட்டேனே!" என்று கதறினான்.

"நடித்தா? உண்மையில் நீ...." என்று முருகேசம்பிள்ளை திகைத்தார்.

"பைத்தியமல்ல! யார் நல்லநடிகர் என்ற போட்டியில், பைத்தியக்காரனாக நான் நடித்தேன். கடைசியாக இவனை......ஐயோ!......" என்று செல்லப்பன் புலம்பினான்.

"பயப்படாதே! இதுவும் அதற்குப் போட்டியான நடிப்புதான்!" என்று இறந்துகிடந்த எல்லப்பன் எழுந்து உட்கார்ந்து நெற்றியிலிருந்த சிகப்புச் சாயத்தைக் கலைத்துக்கொண்டான்.

தான் பைத்தியமென செல்லப்பன் மற்றவர்களை நம்பவைத்தான். தான் இறந்துவிட்டதாக எல்லப்பன் செல்லப்பனையே நம்பும்படிச் செய்தான். போட்டியில் எல்லப்பன் வெற்றியடைந்து, பந்தயப்பணத்தைப் பெற்றுக் கொண்டான்.

—இரா. செழியன்

தையற்கலை
TAILORING ART

[கே. பி. சுந்தரம் G. C. T., T. T, C.]

தையற்கலை நுணுக்கங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம், இன்று, தமிழகத்தில் பெண் சமுதாயத்தினிடத்தே வேரூன்றி வருகிறது. தையல் தொழில் நுணுக்கங்களை விளக்கும் நூல்கள் தமிழில் நல்ல முறையில் இல்லாதது பெருங்குறையே. அப் பெருங்குறையைப் போக்கும் முழு ஆற்றல் எனக்கில்லை என்றாலும், எனது அறிவு ஆற்றலுக்கு ஏற்றபடி கடமையைச் செய்வோம், அது தமிழ் மக்களுக்குப் பயன்படும் அளவுக்குப் பயன் படட்டும் என்ற பணிவான எண்ணத்தோடு தான், தையற்கலைபற்றிய நுணுக்கங்களை விளக்க முற்படுகிறேன்.

உடையின் அளவுகளை ஆதாரமாகக்கொண்டு தான், காகிதத்தின்மீதும், துணிகளின்மீதும் கோடுகள் வரையவேண்டும். ஆகவே அளவுகளைக் கவனமாகவும், சரியாகவும் எடுக்க வேண்டியது மிக முக்கியமாகும். அளவுகள் சரியான முறையில் எடுக்கப்படவில்லை என்றால், வெட்டுவதற்கும், தைப்பதற்கும் செலவிடப்பட்ட நேரம் வீணாவதோடு, பொருளும் பாழ்பட்டுவிடும்.

மொத்தமாக உடை தயாரிப்பவர்கள், சாதாரண சராசரி உடலமைப்பு அளவைக்கொண்டு உடைகள் வெட்டித் தைக்கிறார்கள். அவை சிலருக்குப் பொருந்தியும், பலருக்குப் பொருந்தாமலும் போய்விடும்.

தனிப்பட்ட முறையில், வாடிக்கைக்காரர்களிடம் துணி வாங்கித் தைத்துக்கொடுக்கும் தொழிலாளர்கள், சரியான முறையில் அளவு எடுத்து, உடலுக்குப் பொருந்துமாறு தைத்துக்கொடுக்கவேண்டியவராகிறார்கள். ஆடை அணிபவர்களின் விருப்பத்தை மனதில் கொள்ளவேண்டியது மிக முக்கியமாகும். அணிபவரின் விருப்பப்படி சில அளவுகளைக் கூட்டியோ, குறைத்தோ எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படும்.

பெண்களின் உடை அளவு எடுக்கும் முறை

(1) முதுகு நீள அளவு

1-வது படத்தில் 1-ல் இருந்து இடுப்புப் பள்ளம் 2 வரை படத்தில் காட்டியபடி எடுக்க வேண்டும்.



படம் 1

(2) முழுநீள அளவு

1-வது படத்தில் 1-ல் இருந்து 3-வரை படத்தில் காட்டியபடி, அணிபவரின் விருப்பப்படி கூட்டியோ குறைத்தோ எடுக்கவேண்டும்.

வெற்றியின் பரிசுகள்

●●●

[பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியிலும், பத்தொன்பதாவது நூற்றாண்டின் துவக்கத்திலும், ஐரோப்பாக்கண்டம் முழுவதையும், அச்சமூட்டி, அலறவைத்து, அடிமைப்படுத்தி, எங்கணும் வெற்றிக்கொடி நாட்டி, வெற்றிமுரசு ஒலித்து, வீரவலம்புரிந்து வந்த மாவீரன் நெப்போலியன் 1796-ம் ஆண்டு, இத்தாலியின்மீது படையெடுத்தான். நெப்போலியன் கொண்டுசென்ற படையில் 27000 போர்வீரர்களிருந்தனர். எதிர்தரப்பில் ஆஸ்திரியா துருப்புகளும், சார்டீனியன் துருப்புர்களும் சேர்ந்திருந்ததால், படைவீரர்களின் எண்ணிக்கை, இரண்டுமடங்கு மிகவாகக் காணப்பட்டது. தன்னைவிட இரண்டுமடங்கு வலிவான படையை எதிர்க்கவேண்டிய நிலைமை, நெப்போலியன் படைக்கு ஏற்பட்டது. படைவீரர்களுக்கு ஊக்கமும், உணர்ச்சியும் அளித்தால் ஒழிய,

---

(3) பாதித்தோள் அளவு

1-வது படத்தில் A-ல் இருந்து 4 வரை படத்தில் காட்டியபடி எடுக்கவேண்டும்.

(4) கை நீள அளவு

1-வது படத்தில் 4-ல் இருந்து 5-வரை படத்தில் காட்டியபடி, அணிபவரின் விருப்பப்படி கூட்டியோ குறைத்தோ எடுக்கவேண்டும். முழு நீளக் கை அளவு 4-ல் இருந்து B-வரை.



படம் 2

(5) மார்பு சுற்று அளவு

மார்பு சுற்று அளவு என்பது, மார்பையும், முதுகையும் சுற்றி எடுப்பது. இஞ்ச்டேப்பை இறுக்கியோ அல்லது தளர்த்தியோ பிடிக்கக்கூடாது. டேப்பை அக்குளுக்குச் சிறிது கீழ்ப்படுத்தி, மார்புகளுக்குச் சற்று மேலே எடுக்கவேண்டும். முதுகுப் புறத்தில் டேப் கீழே நழுவிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

2-வது படத்தில் 6-வது எண் மார்பளவை எடுக்கும் விதத்தைக் காட்டுகின்றது. படத்தில் காட்டியபடி அளவு எடுக்கவேண்டும்.

(6) இடுப்புச் சுற்று அளவு

2-வது படத்தில் 7-வது எண் இடுப்புச் சுற்று அளவு எடுக்கும் முறையைக் காட்டுகின்றது. படத்தில் காட்டியபடி இடுப்பு அளவு எடுக்கவேண்டும்.

(7) கைச் சுற்று அளவு

2-வது படத்தில் 8-வது எண் கைச்சுற்று அளவு எடுக்கும் முறையைக் காட்டுகின்றது. படத்தில் காட்டியபடி கைச் சுற்றளவு எடுக்க வேண்டும்.

(தொடரும்)

அவர்கள் எதிரிகளை முறியடிப்பது என்பது, அவ்வளவு எளிதாகப்படவில்லை. அவர்களுக்கு உணர்ச்சி ஊட்டவேண்டி, வீரர்கள் குழுமியிருந்த பாசறையில், வீரச்சொற்பொழிவுகள் பல ஆற்றினான், படைத்தலைவனும், மாவீரனும் ஆன நெப்போலியன். அவற்றில் ஒன்று வருமாறு :]

“படை வீரர்களே! நீங்கள் அனைவரும் பட்டினியால் வாடிக்கொண்டிருக்கிறீர்கள்; ஆடையின்றி நலிகின்றீர்கள். உங்களுடைய அரசாங்கம் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது; அது உங்களுக்கு ஏதும் செய்ய முடியாத நிலையிலிருக்கிறது. இங்குள்ள மலைக் குன்றுகளுக்கிடையே நீங்கள் காட்டிவரும் பொறுமையும், பெருவீரமும் மிகச்சிறந்தவையாகும்; ஆனாலும், அவைகள் உங்களுக்கு ஒரு புகழையும் தேடித்தரவில்லை. உலகிலேயே வளங்கொழிக்கும் மிகச்சிறந்த ஒரு நாட்டிற்கு உங்களை நடத்திச் செல்லப்போகிறேன். பெரும்பெரும் நகரங்களும், வளம்பொங்கும் பகுதிகளும் உங்கள் கைக்கு வரப்போகின்றன. அங்கே நீங்கள், பெருமை, புகழ், பெருநிதி எல்லாவற்றையும் காணலாம். இத்தாலியில் கால் ஊன்றியிருக்கும் இப்பாசறையில் குழுமியுள்ள போர்வீரர்களே, நீங்கள் எதையும் செய்யக்கூடிய வீரமும், எதையும் தாங்கிக் கொள்ளக்கூடிய துணிவும் அற்று வாழ்பவர்களா?”

[இப்படிப்பட்ட வீரப்பேச்சைக் கேட்டவுடன், பிரெஞ்சுப் போர்ப்படை அபினைன் மலைகளை விட்டிறங்கி, விரைந்துசென்று எதிரிப் படைகளை முறியடித்துப், பல இடங்களில் வெற்றிகொண்டது. டூரின் மிலான் என்ற இரு இடங்கள் மட்டும் முற்றுகையிட்டுக் கைக்கொள்ளப்படாமலிருந்தன. அப்பொழுது நெப்போலியனின் படை, டூரின் என்ற இடத்திற்குப் பத்து மைல் தொலைவிலுள்ள செராஸ்கோ என்ற இடத்தில் பாடிவீடு அமைத்துக்கொண்டிருந்தது. போர்வீரர்கள் மிக்க வீரத்தோடு போர்புரிய வேண்டி, 1796-ம் ஆண்டு மே திங்கள் 17-ம் நாள் ‘நெப்போலியன்’ வீரர்களுக்கிடையே வீரச் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினான். அது வருமாறு:]

“படை வீரர்களே! பதினைந்து நாட்களில் நீங்கள் ஆறு வெற்றிகளை அடைந்திருக்கிறீர்கள்; இருபத்தொரு கொடிகளையும், ஐம்பத்தைந்து பீரங்கிகளையும் கைப்பற்றியிருக்கிறீர்கள்; பல கோட்டைக் கொத்தளங்களை அழித்திருக்கிறீர்கள்! பையெட்மாண்ட் என்ற வளங்கொழிக்கும் பகுதியை நீங்கள் வெற்றிகொண்டிருக்கிறீர்கள்! பதினையாயிரம் போர்வீரர்களைச் சிறைப்படுத்தியிருக்கிறீர்கள்; பத்தாயிரம்பேர்களைத்தாக்கி வெற்றிக்கொடியை நிலைநாட்டியிருக்கிறீர்கள்!

இதுவரையில், வெறும் பாழ்பட்ட மலைப்பகுதிக்காக, அவைகளால் நமது தந்தையர் நாட்டுக்கு யாதொரு பலனும் இல்லையென்றாலும், நீங்கள் அழியாச் சிறப்புடைய உங்கள் வீரத்தைச் செலவழித்துப் போரிட்டுவந்திருக்கிறீர்கள். ஆனால் உங்கள் நாட்டுக்காக நீங்கள் செய்துள்ள அரும்பணிகள், ஹாலந்து நாட்டிலும், ரைன் நதிக்கரையிலும் எதிர்த்த படைகளை முறியடித்து, முன்பு நீங்கள் கொண்ட வெற்றிகள், எவ்வளவு சிறப்பு வாய்ந்தனவோ, அவ்வளவு சிறப்புவாய்ந்தனவாகும். நீங்கள் ஏதொன்றும் பெறவில்லை; ஆனால் நீங்கள் எல்லாமும் செய்திருக்கிறீர்கள்; நீங்கள் பீரங்கி இல்லாமலே களங்கள் வென்றிருக்கிறீர்கள்; பாலங்கள் இல்லாமலே ஆறுகள் கடந்திருக்கிறீர்கள்; வெறுங்காலோடு சொல்லியபடியெல்லாம் நடந்திருக்கிறீர்கள்; பிராந்தி இல்லாமல் வாழ்ந்திருக்கிறீர்கள்; ஏன், அடிக்கடி ரொட்டி இல்லாமலேகூட வாழ்ந்திருக்கிறீர்கள். நீங்கள் தாங்கிக்கொண்டவைகளை, குடியரசு காக்கும் கொள்கையினரும், விடுதலைவேட்கை வீரரும் மட்டுமேதாம் தாங்கிக்கொள்ள முடியும். போர்ப்படை வீரர்களே! நன்றி உங்களுக்கு உரித்தாகட்டும்! 1793-ல் நீங்கள் பெற்ற அழியா வெற்றிக்கு, டூலான் வெற்றி முன் அறிகுறியாக அமைந்திருந்தது என்று கொண்டால், இனி அடையப்போகும் மிகப்பெரிய புகழுடை வெற்றிக்கு, உங்களுடைய இப்போதைய வெற்றிகள் முன்னறிவிப்புக் குறிகளாக அமையட்டும்.

சிறிது நேரத்திற்கு முன்னால், உங்களை மிகக் கடுமையாகத் தாக்கப்போவதாக அச்சுறுத்திக் கொண்டிருந்த இரண்டு படைகளும், உங்களுக்கு முன்னாலேயே வெருண்டோடிவிட்டன; உங்களுடைய துன்பங்களைக் கண்டு கேலி மொழி பேசியவர்களும், உங்களுடைய பகைவர்களின் வெற்றிகளை மனதால் நினைத்து மகிழ்ந்துகொண்டிருந்தவர்களுமான கயவர்கள், இப்பொழுது அச்சத்தாலும், குழப்பத்தாலும் நடுகடுங்குகிறார்கள்.

ஆனால், போர்வீரர்களே! நான் உங்களிடம் பொய்சொல்ல முன்வரவில்லை. நீங்கள் ஒன்றும் சாதிக்கவில்லை என்று கூறுவேன்; ஏனென்றால், நீங்கள் சாதிக்கவேண்டியவைகள் ஏராளம் இன்னும் இருக்கின்றன. டூரினோ மிலானோ உங்கள் ஆதிக்கத்தின்கீழ் இன்னமும் அகப்படவில்லை; டார்குன்சைக் கைப்பற்றும் முயற்சியிலே, செத்துமடிந்த வீரர்களின் சாம்பற் புழுதியிலே, இன்னமும் நடமாடிக்கொண்டுதானிருக்கிறார்கள், பாஸேவில்லேயைக் கொன்ற கொலைகாரர்கள்.

போர்ப்படை மறவர்களே! உங்கள் தந்தையர் நாடு, உங்களிடமிருந்து பெரிய பெரிய சாதனைகளை எதிர்பார்க்கும் உரிமையைப் பெற்றிருக்கிறது. அந்த எதிர்பார்த்தலை நீங்கள் நிறைவேற்றித் தருவீர்களா? முக்கியமான பெருந்தடைகளெல்லாம் தாண்டப்பட்டுவிட்டன, என்பது உண்மைதான். ஆனால் நீங்கள் போரிடவேண்டிய களங்களும், தாக்கப்படவேண்டிய நகரங்களும், கடக்கப்படவேண்டிய ஆறுகளும் பலப்பல இருக்கின்றன. வீரத்தை இழந்துகொண்டிருக்கும் யாரேனும் ஒருவர் உங்களிடத்திலே இருக்கின்றார்களா? அபினைன்ஸ் மலை முகட்டிற்கும், ஆல்ப்ஸ் மலை முகட்டிற்கும் சென்றுவிட எண்ணும் ஒருவரும், தம்மைப் போர்வீரர்கள் என்று சொல்லிக்கொள்ளும் அடிமைகள் கூறும் இழிமொழிகளைக் கேட்டு, வாளாயிருக்கும் ஒருவரும் உங்களிடையே யாரேனும் இருக்கிறார்களா? இல்லை! ஒருவரும் இல்லை! மான்டேநோட்டே, மில்லேஸிமோ, டேகோ மான்டோவி ஆகிய களங்களிலே வெற்றிகொண்ட வீரர்களிடையே யாரும் இருக்கமுடியாது! பிரெஞ்சு மக்களின் புகழொளியை எங்கணும் பரப்ப எல்லோரும் பேரவாக்கொண்டிருக்கிறார்கள்; மன்னாதி மன்னர்களின் மமதையை அடக்க எல்லோரும் விரும்புகிறார்கள்; மதிப்புவாய்ந்த அமைதியை நிலைநாட்ட எல்லோரும் விரும்புகிறார்கள்; அந்த அமைதிதான், தந்தையர் நாடு இதுவரையில் செய்த தியாகச் செயல்களுக்கு ஈடு செய்வதொன்றாகும்; வீடுதிரும்பும்போது, "இத்தாலியை வென்ற போர்ப்படையிலே, நான் ஒரு போர்வீரனாக இருந்தேன்" என்று பெருமிதத்தோடு கூறிக்கொள்வதிலே விருப்பங்காட்டுகிறார்கள்.

நண்பர்களே! உங்களுக்கு இந்த வெற்றி உண்டு என்று உறுதி கூறுகிறேன். ஆனால், முதலில் ஒரு உறுதிப்பாட்டை மட்டும் நிறைவேற்ற நீங்கள் சூளுரை எடுத்துக் கொள்ள வேண்டும்; அதாவது, பகைவர்களால் கொடுமைக்குள்ளாகப்பட்டும், சிறைப்படுத்தப்பட்டும் வாடும் மக்களை, அக்கயவர்களின் பிடியினின்றும் கடுத்து நிறுத்தி, அப்படி அடிமைத் தளையினின்றும் மீட்கப்பட்ட அவர்களை மதிப்பது என்பதாகும். இந்த உறுதிப்பாட்டை நீங்கள் நிறைவேற்றாத வரையில், நீங்கள் மக்களின் விடுதலை வீரர்களாக மாட்டீர்கள், அவர்களைக் கசக்கிப் பிழியும் கருவிகளாவீர்கள்; நீங்கள் பிரெஞ்சு நாட்டின் மதிப்பிற்குரியவராக மாட்டீர்கள், அது உங்களை வெறுத்தொதுக்கிவிடும்; உங்களுடைய முயற்சிகள், உங்களது வீரம், உங்கள் வெற்றிகள், களத்திலே வீழ்ந்த நமது உடன்பிறந்தோரின் குருதி, இறந்தகால வெற்றிச் சிறப்பு—புகழ் ஆகிய எல்லாவற்றையும், நாம் எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு இழந்துவிடுவோம்.

இத்தாலிய நாட்டுப் பெருமக்களே! பிரெஞ்சுப்படை உங்கள் மீது பூட்டப்பட்டிருக்கும் விலங்குகளை உடைத்தெறிய வருகின்றது. பிரெஞ்சு நாட்டு மக்கள், எல்லா நாட்டு மக்களுக்கும் நண்பர்களே யாவார்கள்; ஆகையினாலே, நன்னம்பிக்கை கொண்ட இதயத்தோடு, நீங்கள் பிரெஞ்சு மக்களை அணுகுங்கள்; உங்களுடைய சொத்து, சமயம், பழக்க வழக்கம் ஆகியவற்றிற்கு ஒரு தீங்கும் ஏற்படாது.

நாங்கள் நல்லெண்ணங்கொண்ட படையினராக நின்று போரிடக் கிளம்பியுள்ளோம். உங்களை அடிமைப் படுத்தியுள்ள கொடுங்கோலர்களைத் தவிர, நாங்கள் வேறுயாரையும் வெறுப்பதில்லை!"

நீர்ப்பாசனத் திட்டங்கள்

★ பொறியியலான் ★

2.1. இன்று நம் நாட்டிலே நீர்ப்பாசனத் திட்டங்கள் பல நிறைவேறி வருவதைக் காண்கிறோம். துங்கபத்திரா பேரணைத் திட்டம், மேல் பெண்ணை பேரணைத்திட்டம், ரல்லபாடு பேரணைத்திட்டம், கீழ்ப் பவானி பேரணைத் திட்டம், மலம்புழா பேரணைத் திட்டம், மணிமுத்தாறு பேரணைத்திட்டம் போன்றவை, திராவிட நாட்டிலே இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வருபனவற்றில் முக்கியமானவை. இத்திட்டங்களினால் நாட்டுக்குக் கிடைக்கும் பயன்கள் பலவாயினும், நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றி மக்கள் சரிவரத் தெரிந்துகொள்ள முயலுவதில்லை. இக்கட்டுரையின் வாயிலாக ஏன் திட்டம் வகுக்கவேண்டும் என்பதைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்துகொள்ள இயலும்.

2.2. "உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கும் நிலை" என்ற குறள் அறிவுறுத்துவதுபோல், உழவுத் தொழில் மடங்குமேயானால், பற்றற்ற துறவிகளின் வாழ்வும் பாழ்படுமாயின், சாதாரண மக்களின் பாட்டை எண்ணவும் முடியாது. உழவுத் தொழிலில் ஊக்கங் குறைவதற்குப் பலவகைக் காரணங்கள் உண்டு. ஒன்று, நாட்டு மக்கள் சோம்பித்திரியலாம். அன்றி, அரசு போரிலிறங்கி மக்கள் கவனம் எதிரியின் பாலேயே இழுக்கப்பட்டிருக்கலாம். வான் பொய்க்கலாம். அல்லது பெருமழையினால் வெள்ளந்திரண்டு கழனிகள் பாழ்படுத்தப்படலாம். இவைகளில் பொறியியலாரால் கட்டுப்படுத்தக்கூடியது நீர் ஒன்றே. மக்கள் சோம்பலை நீக்குவதும், அரசு போரிலிறங்காமல் தடுப்பதும், மக்களிடமும், மக்கள் தேர்ந்தெடுத்த அரசின் கையிலுமேயிருக்கின்றன. இயற்கையை அடக்கவே பொறியியலான் முனைகிறான். மனித இயற்கையை அடக்குவது அவன் செயலல்ல, முயற்சியுமல்ல.

2.3. 'நீர் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும், வான் இன்று அமையாது ஒழுக்கு'....மழையில்லாவிட்டால் ஒழுக்கமே சீர்குலைந்துவிடும் என்று கூறுகிறார் வள்ளுவனார். ஆச்சரியப்படவேண்டாம். மழை குறைந்தால் உழவு தடைப்படுகிறது; பஞ்சம் தோன்றுகிறது; பசிப்பிணி தழைக்கிறது; மக்கள் மடிகிறார், மனமாற்றம் ஏற்படுகிறது; மானமும் தாழ்கிறது வானத்தைப் போலவே; மக்கள் ஒழுக்கம் எல்லாவகையிலும் சின்னாபின்னப் படுத்தப்படுகிறது. நிற்க, மழையின்மையைத் தடுக்க இதுகாறும் இயலவில்லை. ஆயினும் கடந்த சில ஆண்டுகளாக மழையை உண்டு பண்ணுவதற்கும், வேண்டிய இடத்தில் பெய்யச் செய்வதற்கும் விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர். அவர் முயற்சி வெற்றிபெறுமாக. நாம், மழையைப்பற்றி, சற்று விரிவாக ஆராய்ந்தோமேயானால், மழை, பெய்யும் ஆண்டிலும் சில மாதங்களில் மட்டுமே பெய்கிறது என்றும், பெய்யும் மழையும் வயல்களுக்கு வேண்டிய அளவுக்குமேல அபரிமிதமாகப் பெய்கிறது என்றும் புலப்படும். வயல்களிலும், மலைகளிலும் மழை பெய்வதோ ஒரே சமயத்தில். வயல்களுக்கு உபயோகப்பட்ட நீரைத் தவிர மழை நீரில் மிச்சம் யாவும் கடலையே சாருகிறது. கோடையில் மறுபடியும் வயல்கள் வறட்சியடைகின்றன. வான் நோக்கி நிற்கத் தொடங்குகிறார் உழவர் திரும்பவும். இரங்கத் தகுந்த நிலை இது. இதை எப்படித் தவிர்ப்பது என்று எண்ணினர் பொறியியலார். எளிதான ஓர் எண்ணம் எழும்பியது. மழைக் காலத்தில் பெய்யும் நீரை, அடக்கி, ஓர் இடத்தில் தேக்கிவைக்க முடியுமேயானால், பின், கோடையில் அந்த நீரையே சிக்கனமாக நீர்ப்பாசனத்துக்கு உபயோகித்துக்கொள்ளலாம் என்ற திட்டமே அது. இவ்விதமாகத் தேக்குவதால் மற்ற வசதிகள் சிலவும் கிடைக்கின்றன. வெள்ளம் கரைபுரண்டு ஓடி, ஆற்றின் மருங்கிலுள்ள ஊர்களைப் பாழ்படுத்தாதவாறு, மழைத்தண்ணீர், போடப்பட்ட அணைக்கு முன்னதாகவே தேக்கப்பட்டுவிடுகிறது. நூறு

அடி, இருநூறு அடி ஆழமுள்ள நீர்நிலைகள் இவ்விதமாக உண்டாக்கப்படுவதால் மின்சாரம் உற்பத்தி செய்ய ஏதுவாகிறது. (எவ்விதம் மின்சாரம் உற்பத்தியாக்கப்படுகிறது என்பதைப் பின்வரும் கட்டுரைகள் விவரிக்கும்) மீன்களைத் தேக்கத்தில் வளரவிட்டு அதனால் கிடைக்கும் பயன்களைப் பெறலாம். மக்கள் உல்லாசப் படகுகளை ஓட்டிக் களிப்புற உதவுகின்றன இந்நீர்நிலைகள். நீர் நிலைக்குச் சமீபமான ஊர்களிலுள்ள கிணறுகளிலும் நீர்மட்டம் உயருகிறது. இவ்விதமாக, நீரைத்தேக்குவதால், தேக்கினால்தான், மனிதன் மழையின் ஓரவஞ்சனைகளைச் சமாளிக்கமுடியும் என்று கண்டுகொண்டான்.

2.4. அடுத்து எழுவன மழைநீரை எப்படித் தேக்குவது, எங்கு தேக்குவது என்ற கேள்விகளே. மழை நீர் வானிலிருந்து வீழ்ந்தபின் கீழ் மட்ட நிலங்களை நோக்கி ஓடுகிறது. நீர், தன்னால் இயன்ற அளவு எவ்வளவு கீழான மட்டத்தை அடைய முடியுமோ அங்கே செல்லும். இவ்விதமாக, மலைகளில் பெய்யும் மழை நீர் மலைகளின் பள்ளத்தாக்குகளை நோக்கி விரைகிறது. சுற்றுப்புறத்திலேயே கீழான மட்டத்தை அடைந்த நீரோடை இன்னும் கீழ் மட்டங்களை நோக்கி ஓடுகிறது. மேலும் பல சிற்றோடைகள் வந்து கலக்கின்றன. ஓடை கொஞ்சங் கொஞ்சமாகப் பெரிதாகி சிற்றாறு ஆகிறது. சிற்றாறு பல கலந்து ஆறு தோன்றுகிறது. கீழ்மட்டத்தையே குறிக்கோளாக வைத்துச் செல்லும் ஆறு கடலையடைந்தபின் தான் இளைப்பாறுகிறது. இந்த உண்மையை எல்லோரும் அறிவர். எந்த ஆற்றின் படுகையும் சுற்றுப்புறத்திலேயே கீழான மட்டத்தில் தான் இருக்கும். அன்று! அன்று!! சுற்றுப்புறத்தின் கீழான மட்டத்திலேதான் எந்த ஆறும் ஓடும்.

2.5. ஆற்றின் குறுக்கே ஒரு பெரிய சுவர் கட்டுவதாக எண்ணிக்கொள்வோம். வரும் நீர், போக வழியின்றி, சுவருக்கு எதிரோட்டத்திலுள்ள (Upstream) நீர்மட்டம் உயருகிறது. சுவற்றின் தலைமட்டம்வரை நீர் மட்டம் உயர்ந்தபின் நீர் சுவற்றின்மேல் தாவி மறுபடியும் பழைய பாதையிலே செல்லுகிறது. இப்பொழுது சுவற்றுக்கு எதிரோட்டத்திலுள்ள நீர் மட்டம் சுவர்த்தலைமட்டத்தைவிட உயரமானதாகவே யிருக்கும். இந்த இரண்டு மட்டங்களுக்குமுள்ள வித்தியாசத்துக்கு தலை (Head) என்று பெயர். (படத்தைப் பார்க்கவும்) ஆற்றில் செல்லும் நீரளவைப் பொறுத்திருக்கிறது இத்தலையின் அளவு. அதிக நீர் சென்றால் தலை அதிகரிக்கும். நீர் குறைந்தால் தலையும் குறையும். ஆற்றில் நீர்ப்போக்கே



நின்றுவிட்டால் நல்ல சிறிது சிறிதாகக் குறைந்து சன்னமாகிவிடும். அப்பொழுது ஆற்றின் எதிரோட்ட நீர்மட்டம் சுவர்த்தலை மட்டத்திலேயே இருக்கும். ஆனால் சுவற்றுக் குக் கீழோட்ட நீர்மட்டம் (Down Stream water level) சுவர் கட்டப்படுவதால் மாறு படாது. ஆற்றின் எதிரோட்ட நீர்மட்டமே வெகுவாக உயர்ந்துவிடும். பழைய நீர்மட்டத் துக்கும், புதிய நீர் மட்டத்துக்குமுள்ள வித்தி யாசம் மட்ட உயர்வு (Afflux) எனப்படும். இம்மட்ட உயர்வு, சுவற்றின் உயரம், ஆற்று நீரின் அளவு இவைகளையே பெரும்பாலும் பொறுத்திருக்கிறது.

2·6. இவ்வாறு கட்டப்படும் சுவற்றுக்கு "அணை" என்று பெயர். அணை மிகப் பெரி தானால் பேரணை (Dam) எனலாம். அணை போடப்பட்டதினால் உயர்ந்த நீர்மட்டம் பல விதங்களிலும் உபயோகமாயிருக்கிறது. பழைய மட்டத்துக்கு மேல்மட்டத்திலுள்ள வயல்க ளுக்கும் இப்பொழுது தண்ணீர் பாய்ச்சலாம். மின்சாரமும் எடுக்கலாம். வயல்களுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சக் கால்வாய்கள் (Canals) தேவைப்படுகின்றன. இக்கால்வாய்களுக்குத் தண்ணீர், பேரணையின் தேக்கத்திலுள்ள மதகு கள் (Sluices) வழியாக அனுப்பப்படுகிறது. தண்ணீரைத்தேக்கியபின், வேண்டியபொழுது, வேண்டியமட்டும், மதகுக்கதவுகளைத் (Sluice shutters) திறந்து நீரைக் கால்வாய்களில் அனுப்பலாம்.

2.7. சுமார் நூறு அடி உயரமுள்ள ஒரு பேரணை எழுப்பவேண்டுமென்று வைத்துக் கொள்வோம். கட்டப்போகும் அணையின் உயரம் வேண்டிய தேக்க நீரின் அளவைப் பொறுத்திருக்கிறது. இந்தப் பேரணையை ஆற்றில் எந்த இடத்திலும் கட்டிவிட முடி யாது. ஏனென்றால், கட்டியபின் நீர் மட்டம், பழைய மட்டத்துக்குமேல் நூறடியாவது உயருமாகையால், இதுகாறும், பேரணை கட் டப்போகும் இடத்துக்கு எதிரோட்டத்திலும், ஆற்றின் மருங்குகளிலுமுள்ள சிற்றூர்கள் நீரில் மூழ்க ஏதுவாகின்றது. பல நஞ்சை நிலங்களும் முழுகிவிடலாம். எவ்வளவுக் கெவ்வளவு குறைந்த தொகை ஊர்களும், நிலங்களும் மூழ் குகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு பேரணை கட்டுமிடம் சிறந்தது. மேலும், பேரணைகட்டிய பின், நீர், அணையின் மருங்குகளில் வழிந்து ஓடிவிடாதவாறு, எதிரோட்டத்தில் உயர்நிலங் கள் இருக்கவேண்டும். இந்த உயர் நிலங்களின் மட்டம், புதிய நீர்மட்டத்தைவிட உயர்ந்த தாக இருக்கவேண்டும். பேரணை தண்ணீரின் அமுக்கத்தினால் கவிழ்ந்துவிடாதவாறு இருக்க, கட்டுமிடத்தில் நல்ல வாரம் (Foundation) போடத்தகுந்தவாறு பாறையிருக்கவேண்டும். இத்தகைய பல நியதிகளையும் ஒருங்கு சேர்த்து எண்ணினால், பொதுவாக, ஆறுகள் மலைகளை விட்டுச் சமவெளிகளுக்குள் நுழையும் இடங் களிலேயே பேரணைகள் கட்டலாம் என்று முடிவாகிறது.

2.8. பேரணைகளைப்பற்றி மேலும் விரிவாக வும், அவைகளைக் கட்டுவதற்குக் கையாள வேண்டிய முறைகளைப்பற்றியும் அடுத்தக் கட் டுரை விவரிக்கும். ஓர் நீர்ப்பாசனத்திட்டம் இயற்றுவதற்குப் பரந்த அமைப்பியல்வகை அறிவு வேண்டும். அத்திட்டத்தை உரு வேற்றுவதற்கு, பொறியியல்வகை அறிவு, மின்னியல்வகை அறிவு முதலியனவும் வேண்டும்.

●●●

இரண்டு மாடுகள்

கிரேக்க நாட்டுத் தத்துவ அறிஞர் ஒருவ ரிடம், ஒரு பெரிய பணக்காரன் தன் மகனுக் குப் படிப்புச் சொல்லிக்கொடுக்கும்படி கேட் டுக்கொள்ள வந்தான். படிப்புச் சொல்லிக் கொடுக்க அந்த அறிஞர் ஐந்நூறு வெண் பொற் காசுகள் கேட்டார். அறியாமையும் பேராசையும் கொண்ட அந்தப் பணக்கார னுக்கு அந்தத் தொகை மிகவாகப்பட்டது. அவ்வளவு பணம் கொடுப்பதற்கு மிகவும் மனம் புழுங்கிய அவன், அதைவிடக் குறைந்த தொகைக்கு ஒரு மாடு வாங்கிவிடுவேன் என்று கூறினான். தந்தையின் கஞ்சத்தன்மையைக் கண்ட தத்துவ அறிஞர் மனம்வெறுத்து, "ஒரு மாடு வாங்கு. அதோடு சேர்த்து, உனக்கு, ஆக மொத்தம் இரண்டு மாடுகள் கிடைக்கும்" என்று பதிலிறுத்தார். அவருடைய கருத்துப் படி படிக்காத பையன் மாட்டைவிட எந்த விதத்திலும் சிறந்தவனல்ல என்பதாகும்.

நாங்கள் :: குற்றவாளிகளல்ல

(சென்னை அரசியலார் 'ஐவர்' மீது தொடர்ந்த வழக்கினையொட்டி 11-8-53 நாளன்று இரா. நெடுஞ்செழியன் நீதிமன்றத்தில் வெளியிட்ட அறிக்கை கீழே தரப்படுகிறது)

விடுதலை வீரர்கள்

மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே!

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நான், அக்கழகத்தின் பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் நால்வருடன், தங்களின் மேன்மை தங்கிய நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டிருக்கும் நிலைமையை நன்கு உணர்கிறேன். நானும் ஏனையோரும் ஈடுபட்டிருக்கும் சில நடவடிக்கைகள், இன்றைய அரசாங்கத்தின் கண்ணோட்டத்தின்படி, குற்றமுடையன என்று கருதப்படுகின்றன என்பதை, அரசாங்க வழக்கறிஞரின் வாதத்திலிருந்து அறிந்து கொண்டேன். வேற்று நாட்டவரின் அரசியல் ஆதிக்கப் பிடியிலும், பொருளாதாரச் சுரண்டல் பிடியிலும், நாகரிகம்—பண்பாடு—மொழி ஆகியவற்றின் ஆதிக்கப் பிடியிலும் சிக்கிச் சீரழியும் ஒரு நாட்டை, அப்பிடிகளிலிருந்து, விடுவிக்க வேண்டி, தூய உள்ளத்தோடு, கண்ணியப் பண்போடு, நேர்மையான வழியில், அமைதியான முறையில் என்னென்ன நடவடிக்கைகளை ஒரு விடுதலை இயக்கம் எடுக்குமோ, அவ்விதமான நடவடிக்கைகளில்தான், திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரையில் ஈடுபட்டு வந்திருக்கிறது. தாயகத்தின் விடுதலைக்குப் பாடுபட்டுவரும் எங்களை 'விடுதலை வீரர்கள்' என்று அழைக்க வேண்டிய அரசாங்கம், 'குற்றவாளிகள்' என்று அழைக்க முன்வந்திருப்பது, நல்லறிவு படைத்தோர் அனைவர்க்கும் வியப்பு உணர்ச்சியைத்தான் தரும் என்பதில் ஐயமில்லை.

கழகத்தின் குறிக்கோள்

திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய திராவிடப் பகுதிகள் நான்கும் ஒன்றுபட்ட ஒரே சுதந்தர சோஷலிஸ திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியை, பலாத்காரமற்ற அமைதியான ஜனநாயக முறையில் அமைக்க வேண்டும் என்பதைத்தான் அரசியல் கொள்கையாகக் கொண்டிருக்கிறது.

பொருளாதாரத் துறையில் எல்லோரும் சக்திக்கு ஏற்றபடி உழைக்க வேண்டும், தேவைக்கு ஏற்றபடி வசதிகளைப் பெற வேண்டும் என்ற கொள்கையை நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் பாடுபட்டு வருகிறது.

சாதி சமயம் காரணமாக ஏற்பட்டிருக்கும் ஏற்றத் தாழ்வுகளை அறிவுரை கூறுவதன் மூலமும், சட்டத்தின் மூலமும் அமைதியான முறையில் அறவே அகற்றி, மனிதனை மனிதன் என்று நினைக்கும் சமூக சமத்துவ மனப்பான்மை பொதுவாக உலகெங்கும், குறிப்பாகத் திராவிடமெங்கும் நிலவ வேண்டும் என்ற சமுதாயக் கொள்கையைக் கொண்டிருக்கிறது.

இந்த நாட்டைப் பொறுத்தவரையில் சமுதாய ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணமாக இருந்துவரும் ஆரியப்பண்பு அகற்றப்பட வேண்டும் என்பதையும், சமுதாயம் ஒற்றுமைப் படுவதற்குக் காரணமான 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற திராவிடப் பண்பு ஆதரவு பெற வேண்டும் என்பதையும் கழகம் வலியுறுத்தி வருகிறது. வரலாற்று ஆசிரியர்கள் கூற்றும், நடைமுறைப்போக்கும் பார்ப்பனர்களை ஆரியர்கள் என்றும் ஏனைய பார்ப்பனர் அல்லாதாரைத் திராவிடர் என்றும் மதிப்பிடச் செய்கின்றன. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாங்கள் பார்ப்பனரிடத்தே காணப்படும் ஆரியத்தையும் வெறுக்கிறோம். பார்ப்பனரல்லாதாரிடத்தே காணப்படும் ஆரியத்தையும் வெறுக்கிறோம்.

செயலிலே அமைதி

மேற்கண்ட கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் முயற்சியில், சென்ற நான்கு ஆண்டுகாலமாகப் பலாத்காரமற்ற அமைதியான வழியைத்தான் கழகம் கடைபிடித்து வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் கொலை செய்ய, கொள்ளையடிக்க, தீவைக்க, அதிகாரிகளை அடிக்க, அவர்கள் முகத்தில் திராவகத்தை ஊற்ற, தண்டவாளங்களைப் பெயர்த்தெறிய, தந்திக் கம்பிகளை அறுக்க, தபால் ஆபீசுகளை — கச்சேரிகளை — போலீஸ் ஸ்டேஷன்களை — ரயில்வே ஸ்டேஷன்களை நெருப்பு வைத்துக் கொளுத்த, கச்சேரி ரிகார்டுகளைப் பொசுக்க, பார்ப்பனர்களைப் பொதுப் படையாகவோ, தனிப்பட்ட முறையிலோ, பலாத்கார முறையில் தாக்க — துன்புறுத்த, திட்டங்களைத் தீட்டினதில்லை; தீட்டினோம் என்று அரசாங்கமும் ஒரு சிறு சான்றும் காட்ட இயலாது. ஒரு விடுதலை இயக்கத்துக்குத் தேவையான அரசியல் நடவடிக்கைகளைச் சென்ற நான்கு ஆண்டுக்காலத்தில் கழகம் மேற்கொண்ட போதெல்லாம், கழகத்தின் பொதுச் செயலாளர் அவர்கள் அமைதி, கட்டுப்பாடு, கண்ணியம் ஆகியவற்றைக் காப்பாற்றும்படியாகக் கழகத் தோழர்களுக்கும், பொது மக்களுக்கும் அறிவுறுத்திக் கூறியும், தனிப்பட்டோர் சொத்துக்கும், பொதுச் சொத்துக்கும், இம்மி அளவு சேதமும் ஏற்படாதவகையில் நடவடிக்கைகள் நிறைவேற வேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்லியும் அறிக்கைகள் வெளியிட்டு வந்திருக்கிறார்கள். அவ்வாறே கழகத்தைச் சேர்ந்தோரின் நடவடிக்கைகள் நிகழ்ந்தேறி வந்திருக்கின்றன.

சீரிய பணிகள்

மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே!

தங்களின் மேன்மை தங்கிய நீதிமன்றத்தின் குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் நானும் ஏனையோரும், பள்ளிப் பருவ காலத்திலும் சரி, கல்லூரிகளில் படித்த போதும் சரி, பல்கலைக் கழகத்தில் தொடர்பு கொண்டிருந்த போதும் சரி, பிறகு பொது வாழ்க்கையில் ஈடுபட்ட போதும் சரி, திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்புகளைத் தாங்கிய போதும் சரி, எங்களுடைய சொற்களும், செயல்களும், அறியாமையை அகற்றவும், அறிவைப் பரப்பவும், பொய்மையை நீக்கவும், உண்மையை நிலைநாட்டவும், அலட்சிய உணர்ச்சியைப் போக்கவும், கடமை உணர்ச்சியையூட்டவும், அடிமை மனப்பான்மையை நீக்கவும், விடுதலை வேட்கையை வளர்க்கவும், பலாத்கார உணர்ச்சியை அடக்கவும், அமைதியை நிலைநாட்டவும் ஆன சீரிய பணிகளுக்காகச் செலவிடப்பட்டு வந்திருக்கின்றனவேயல்லாமல், மக்களின் நல்வாழ்வைக் கெடுத்தன என்றோ, சமூகத்தின் தரத்தைக் குறைத்தன வென்றோ, சுட்டிக் காட்ட யாராலும் இயலாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கும் வளர்ச்சியும், மக்கள் பொது மன்றத்தில், அது வரவேற்கப்படும் காட்சியும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருவதே போதுமான சான்றாகும்.

எங்களின் நோக்கத்தை — மேன்மை தங்கிய நீதிபதி அவர்கள் அறிந்து கொள்வாரானால், நாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று, தீர்ப்பு அளிக்கச் சிறிது உதவியாக இருக்குமென்று கருதுகிறேன்.

அதே செயல் குற்றமா?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைத் தூய நோக்கம், அரசியல் — பொருளாதார — சமூகத் துறைகளில், தாயகத்திற்கு விடுதலை வாங்கித் தருவது என்பதாகும். தாயகத்தின் மூன்று துறை விடுதலைக்கான எண்ணங்களையும், செயல்களையும், பலாத்காரமற்ற அமைதியான வழியில் தூண்டுவதை, வெள்ளைக்கார அரசாங்கம், முன்பெல்லாம், இந்தியத் துணைக் கண்டத்தில் தடுத்து வந்தது. இந்திய ஆட்சியை, வெள்ளைக்காரர்கள் கையிலிருந்து, இந்தியர் கைக்கு மாற்ற, காங்கிரஸ் தலைவர்கள் அந்த நாட்களில் கூறிய எண்ணங்களும், செய்த செயல்களும், தூண்டப்பட்ட குற்றங்களாக வெள்ளையர் ஆட்சியால் கருதப்பட்ட போது, காங்கிரஸ் தலைவர்கள், இப்படி அமைதியான முறையில் தூண்டுவது குற்றமாகாது என்றே வாதித்தனர். அப்படிப்பட்ட மாபெரும் காங்கிரஸ் தலைவர்கள் ஆட்சி பீடத்தில் ஏறியிருப்பதால், பலாத்காரமற்ற அமைதியான விடுதலைப் போராட்டத் திட்டங்களையும், தூண்டுதல்களையும், வெள்ளையர் போல் குற்றமெனக் கருதமாட்டார்கள் என்று நேர்மையாக எண்ண இடமேற்பட்டது. ஆனால் காங்கிரஸ் தலைவர்களைக் கொண்ட அரசாங்கத்தால், காங்கிரஸ்

தலைவர்களாலேயே குற்றமற்றது என்று வாதிடப்பட்ட செயல், குற்றமாகக் கருதப்பட்டு, எங்கள் மீது சுமத்தப்படுகிறது என்பதை எண்ணும்போது வியப்பு தோன்றுகிறது.

டால்மியாபுரப் போராட்டம்

திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்துள்ள அறப் போராட்டங்களிலே 'டால்மியாபுரம்' என்ற புகை வண்டி நிலயப் பெயர்ப்பலகையை 'கல்லக்குடி' என்ற அழகு தமிழ்ப் பெயரால் மாற்ற வேண்டும் என்பது ஒன்றாகும். டால்மியாபுரம் என்ற பெயர் சிமெண்ட் தொழிற்சாலை வைக்க லைசென்ஸ் பெறும் வகையில், வடநாட்டு அரசியல் ஆதிக்கத்தின் சின்னமாகவும், தோழர் டால்மியா பொருள் சுரண்டும் வகையில் வடநாட்டு முதலாளித்துவ பொருளாதாரச் சுரண்டல் ஆதிக்கத்தின் அறிகுறியாகவும், கல்லக்குடி என்ற தமிழ்ப் பெயரை டால்மியாபுரம் என்று மாற்றி அமைத்துள்ள வகையில், வட நாட்டு மொழி ஆதிக்கத்தின் அறிகுறியாகவும் விளங்குவதால் அதனைத் திராவிடத்தின் அவமானச் சின்னமென்று திராவிட முன்னேற்றக் கழகம் தன் கொள்கைக்கு ஏற்ப நினைத்தது டால்மியாபுரம் என்ற பெயரை அகற்றி; அந்த புகைவண்டி நிலையத்தின் பெயரை கல்லக்குடி என்று மாற்ற வேண்டும் என்று சென்ற ஒரு ஆண்டுகாலத்துக்கு மேலாகப் பல மாநாடுகளிலும் பொதுக் கூட்டங்களிலும், கமிட்டிகளிலும், தீர்மானங்கள் நிறைவேற்றி அவ்வப்போது இந்திய அரசாங்கத்துக்கும், ரயில்வே அதிகாரிகளுக்கும், சென்னை அரசாங்கத்துக்கும் அனுப்பி வைத்தோம். இப்படி ஜனநாயக முறையில் கேட்டுக்கொண்ட விருப்பத்தை, இதுவரையில், இந்திய அரசாங்கமோ, ரயில்வேயோ, சென்னை அரசாங்கமோ பொருட்படுத்தவில்லை. எங்கள் விருப்பத்துக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ, ஒரு வரி பதில் எழுத வேண்டும் என்ற கண்ணியத்தையும் நாணயத்தையும், நேர்மையையும் கூட இரண்டு அரசாங்கமும் கடைபிடிக்கவேயில்லை பொறுத்துப் பொறுத்துப் பார்த்தோம், பதிலில்லை. சென்ற மே திங்கள் இறுதியில் அரக்கோணத்தில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்குழு கூட்டத்தில், டால்மியாபுரப் போராட்டத்தைப் பற்றிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அதன்படி, 1953 ஜுலை 1-ம் நாளன்று இறுதியர்கப் பலரின் கையெழுத்திட்ட விண்ணப்பத்தை அரசாங்கங்களுக்கு அனுப்பிவைப்பதென்றும், அதிலிருந்து 15 நாட்கள் வரையில் பதிலை எதிர்பார்ப்பதென்றும், பதில் எதுவும் எழுதாமல் அரசாங்கம் அலட்சியப் போக்கிலேயே இருந்து விட்டால், 1953 ஜுலை 15 ம் நாள் தோழர் மு. கருணாநிதி அவர்கள் சிலருடன் சென்று டால்மியாபுரம் என்ற பெயர்ப் பலகையின் மீது கல்லக்குடி என்று எழுதப்பட்ட தாளை ஒட்டுவது என்றும் முடிவுகள் செய்யப்பட்டன. ஜனநாயக முறையில் எங்களுக்கு கடைபிடிக்க இருந்த கடைசி முறை அதுவாகத்தான் இருந்தது இந்தப் போராட்டத்தில் பொதுச்செயலாளர் கூற்றிற்கு ஏற்ப அமைதி கடைபிடிக்கப்பட்டது, கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

புதிய கல்வித்திட்டக் கண்டனம்

அடுத்தது ஆரம்பக் கல்வித் திட்ட எதிர்ப்பு மறியல் போராட்டத்தின் நோக்கத்தையும், செயலையும், மேன்மை தங்கிய நீதிபதி அவர்கள் அறிய வேண்டுகிறேன். புதிய ஆரம்பக் கல்வி திட்டத்தைப் புகுத்தும் முறையில், முதலமைச்சர் ஆச்சாரியார், ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்பைப் புறக்கணித்தார் என்பது மட்டுமல்லாமல், ஜனநாயக முறையில் வேண்டுகோள் விடுப்பவர்களை யெல்லாம் கேலி மொழி பேசியும் வருகிறார். புதிய கல்வித் திட்டத்தைப் புகுத்துவதற்கு ஆச்சாரியார் கூறிய விளக்க உரைகளைக் காணும் போதுதான், அந்தத் திட்டத்தைப் பற்றிப் பல எண்ணங்களும், அச்சங்களும், எங்கள் உள்ளத்தில் குடிகொண்டன. இந்த அச்சம், திட்டத்தைக் கொண்டு வந்த ஆச்சாரியாரையும், அவரது மனப் பான்மையையும், அவரது போக்கையும், காணும் போது மிக்க அழுத்தம் பெறுகிறது. ஆச்சாரியார் பலதடவைகளில் தம்மைப் பழைமை விரும்பியாகவும், வர்ணாச்ரமத்தின் ஆதிநாள் ஏற்பாட்டின் புத்திசாலித்தனத்தைப் போற்றுபவராகவும், பழைய காலத்து ரிஷிகளும், முனிவர்களும், ஜாதி முறைகள்பற்றி செய்த ஏற்பாடுகள் மிக உன்னதமானவை என்று கூறுபவராகவும் காட்டிக் கொண்டு வந்துள்ளார்; எனவேதான்,

அவர் புகுத்தியுள்ள புதிய திட்டம், அவர் அறிந்தோ, அறியாமலோ, அவராகச் சேர்த்துக் கொண்டதாலோ அல்லது அவரது இரத்தத்திலே ஊறிய தன்மையாலோ வர்ணாச்ரமத்தை நிலைநாட்டுவதாக அமைந்துவிட்டது என்று எண்ண வேண்டி வந்தது. நாட்டின் எதிர்கால நலனையும், வீழ்ச்சியுற்ற திராவிடப் பெருங்குடி மக்கள் நலனையும் காப்பாற்ற, புதிய திட்டத்தை எதிர்க்க வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்பட்டது. எனவேதான் புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தைக் கைவிடும்படி, நாங்கள் சென்ற இரண்டு மாத காலமாகத் தீர்மானம் மூலம் கேட்டுக்கொண்டோம். எங்களைப் போலவே கல்வி நிபுணர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், இடதுசாரிக் கட்சிகள், காங்கிரஸிலே உள்ள வேறு பல தலைவர்கள் ஆகியோர் கேட்டுக்கொண்டார்கள். 1953ம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ம் நாள், திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் சார்பில் ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, ஆச்சாரியாருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆச்சாரியார் அரசாங்கம் ஒரு வரியில் பதில் தெரிவிக்கும் கண்ணியத்தைக்கூடப் பெறவில்லை. இதுவரை எதிர்பார்க்காத முறையில் நாலா பக்கத்திலிருந்தும். பெருவாரியான வகையினரிடமிருந்து எதிர்ப்புக் குரல் எழும்பியும், ஆச்சரரியார் தம் ஆணவப் போக்கால், அவை அனைத்தையும் புறக்கணித்தார். புறக்கணித்தது மட்டுமல்லாமல், "புத்தனும், ஏசுவும், சங்கரரும், மக்களைக் கேட்டுக் கொண்டா செய்தார்கள், நான் செய்ய?" என்றும், "என்னுடைய கல்வித் திட்டம் பிடிக்காவிட்டால், நான் இறந்த பிறகு என்னுடைய கல்லறையின் மீது எதிர் கால மாணவர்கள் மண்ணைவாரி இறைக்கட்டும், காரி உமிழட்டும்" என்றும், "என்னைக் கேட்டால் படிப்பே மனிதனுக்கு அவசியமில்லைஎன்பேன்" என்றும், "அசோகனும், அக்பரும், ஹைதர்—அலியும் படிக்கவா செய்தார்கள். அவர்களெல்லாம் படிக்காமல் நாடாள வில்லையா" என்றும், "ஆரம்பப் பள்ளிகளையே மூடிவிட்டால்கூட நல்லது என்று கருதுகிறேன்" என்றும், "நான் 50 வருட காலமாக யோசித்துவரும் திட்டம்" என்றும், "என்னை எதிர்ப்பவர்கள் பித்தலாட்டக் காரர்கள்" என்றும், "யார் என்ன சொன்னாலும் நான் கவலைப்படபோவதில்லை" என்றும், "மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்பட அவசியமில்லை" என்றும், இப்படியாகப் பல மொழிகள் புகன்று, தாமே நினைத்த திட்டத்தைத் தாமாகவே புகுத்தி விட்டார். பொதுக்கூட்டங்கள்—மாநாடுகள் போட்டுப் பேச்சுமூலமும், தீர்மானம் மூலமும், பத்திரிகைகளில் எழுத்து மூலமும் கேட்டுக் கொண்ட பிறகும், யாதொன்றையும் பொருட்படுத்தாமல் ஆச்சாரியார், திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்துவிட்டார். பிடிவாதமாகத் திட்டத்தைப் புகுத்தும் ஆச்சாரியாரைத் திருத்த, வேறு வழியில்லாமல், மறியல் என்ற சட்டத்திற்கு உட்பட்ட பிடிவாத முறையின் மூலமாகத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மறியல் சட்டபடி கொடுக்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமை. எனவேதான், முதலமைச்சர் சட்ட மன்றம் துவக்கும் நாளான 14—7—53-ம் நாள், அவர் சட்ட சபைக்குச் செல்லுமுன், அவர் வீட்டிற்குச் சென்று, கல்வித் திட்டத்தைப் புகுத்துவதை நிறுத்தும்படி, பலாத்காரமற்ற அமைதியான மறியல் மூலம் கேட்டு, அவர் இணக்கம் பெறுவது, என்று திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானித்தது.

தோழர் சம்பத்து அவர்கள், முன்மாதிரியாகச் சென்று மறியல் செய்வதன் மூலம், பலர் அந்த மறியல் முறையைப் பின்பற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டதோடு, அந்த வகையில் தோழர் சம்பத் அவர்கள் தலைமை தாங்குவார் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த மறியல் செய்யும், சட்டத்திற்கு உட்பட்ட உரிமையைக் கூட, சென்னை அரசாங்கம் பறித்துக்கொண்டு, ஆச்சாரியார் வீட்டிற்குச் சென்று, அவரைக்காண வழி செய்யாமல் கைது செய்தும், அடித்து விரட்டியும், மண்டையைப் பிளக்கச் செய்தும், கைகால்களை ஒடித்தும் துன்புறுத்தியிருக்கிறது. தியாகராய நகரில், சிறிது அமைதி குறைந்தது என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டத்தை மேற்கொண்டவர்களால் அல்லவென்பதும், மறியல் உரிமையைப் பறிக்கும் வகையில் நடந்துகொண்ட போலீசாரின் நடவடிக்கைகளே காரணமாகும் என்பதும் நன்கு விளங்கும். மறியல் என்ற சட்டத்திற்குட்பட்ட அமைதியான கிளர்ச்சியை, திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கியது எவ்வளவு அவசியமும், அறிவுடைமையும்

ஆகும் என்பது, சட்டசபையில் அந்தத் திட்டம் தோற்றுப்போனதே போதுமான சான்றாகும். புதிய கல்வித்திட்டத்தை நிறுத்திவைத்து, அதனை நிபுணர் கமிட்டிக்கு விடவேண்டும் என்று, 139 சட்டசபை உறுப்பினர்கள் ஓட்டுகள் மூலம் நிலைநாட்டிக் கட்டளையிடவும், அதனை மதியாது, 137 சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவை மட்டுமே பெற்றுத் தம் இலட்சியத்தில் தோல்வியடைந்த முதலமைச்சர் ஆச்சாரியார், திருத்தத் தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டுவராமல் சர்வாதிகாரம் செய்கிறார் என்றால், மறியல் என்ற ஆயுதத்தைத் தவிர, வேறு எந்த ஜனநாயக முறையால் அவரைத் திருத்த இயலும்? எனவே, மறியலுக்கு ஆதரவு அளித்தது, நாட்டின் எதிர்கால மக்களின் நல்வாழ்வைக் காப்பாற்றவும், இன்றைய மாணவர் சமுதாயத்தின் நலனைப் பேணவுமேயாகும் என்பது எளிதில் புலனாகும். இப்படிப்பட்ட அமைதியான புதிய கல்வித்திட்ட எதிர்ப்பு மறியல் கிளர்ச்சி எப்படிக் குற்றமாகும்?

ரயில் நிறுத்தப் போராட்டம்

அடுத்து, ரயில் நிறுத்தப் போராட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் கையாண்ட நோக்கத்தையும், மேற்கொண்ட செயலையும் உற்றுக் கவனித்தால், ரயில் நிறுத்தப் போராட்டம் தாயகத்தின் தன்மான உணர்ச்சியைக் காப்பாற்றவும், விடுதலைவேட்கை உணர்ச்சியை வளர்க்கவும், அவசரப்பட்டு, தன்னிலை மறந்து, சொல்லக்கூடாத "நான்சென்ஸ்" என்ற சொல்லை, திராவிட நாட்டினர்மீது அடிக்கடி சொல்லத் தயங்காத இந்தியப்பிரதமர் பண்டித நேரு, இனித் தன் செய்கைக்கு நாணித் திருந்துவதற்கான உணர்வை ஊட்டவும், எடுத்துக் கொள்ளப்பட்டதாகும் என்பதை நன்கு அறியலாம். ரயில் நிறுத்தக் கிளர்ச்சி, பொறுப்பான பதவியில் இருக்கும் நேருவை உணரவைப்பதற்கேயாகும். இதுதான் எங்களது தூய நோக்கம். இந்த வழியைத் தவிர வேறு சிறந்த வழி எதையும் நேரு அவர்கள் விட்டுவைக்கவில்லை. எழுதிப்பார்த்தோம், தீர்மான வடிவில் கேட்டுப்பார்த்தோம், சமாதானம் கூறச்சொல்லிக் கேட்டோம், சென்ற ஆண்டு ஆகஸ்ட் திங்களிலிருந்து. அண்மையில் பண்டிதர் நேரு, நிலைமையை நன்கு உணர மறுத்து, பொறுப்பற்ற முறையில், ரயில் நிறுத்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களின் செய்கையை "நான்சென்ஸ்" என்று கண்டித்ததோடு, இனி இவ்விதம் செய்தால், கடுமையான நடவடிக்கை எடுப்பேன் என்று சவால் விடுவதுபோல் கூறினார். பொறுப்பற்ற முறையில் பேசும் பண்டித நேருவுக்கு அவரது தவற்றை உணர்த்தவும், புண்பட்ட நமது நெஞ்சத்தை அவருக்குக் காட்டவும், அமைதியான முறையில், 15-7-53 ஆம் நாள் பகல்பொழுதில் மட்டும், ரயில்வே சொத்துக்களுக்கு இம்மியளவு சேதமும் ஏற்படாத வகையில், ரயில் நிறுத்தப் போராட்டத்தை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ரயில் நிறுத்தத்தின் நோக்கம் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்க அல்ல; அதிகாரிகளுக்குத் தொல்லை கொடுக்க அல்ல; சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்க அல்ல; வேறு அமைதிக்குப் பங்கம் வரும் செயலைச் செய்ய அல்ல; பண்டித நேருவின் கூற்றின்மீது கொண்டுள்ள வெறுப்புணர்ச்சியின் அறிகுறியாகவும் நேரு திருந்தவும் ஆகும்.

எங்களது போராட்ட நிகழ்ச்சிகளின் உள்ளக் கிடக்கையை அறிந்துகொண்டால், எங்களது நோக்கம் எவ்வளவு தூய்மையானது என்பதை யாவரும் நன்கு உணரக்கூடும்.

குற்றவாளிகளல்ல

இன்றைய அரசாங்கத்தால், அதன் எண்ணப்படி, நாங்கள் குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறோம். நாங்கள் குற்றமற்றவர்கள் என்பதைச் சொல்ல, ஏராளமான சாட்சியங்கள் உண்டு. அவைகளை இங்கே கொண்டுவந்து நிறுத்த எங்களுக்கு வாய்ப்பும் வசதியும் இல்லை. அவைகள்தாம் பொதுமக்களின் நல்லெண்ணம், பொதுக் கூட்டங்களிலும், மாநாடுகளிலும், அவர்கள் எழுப்பும் குரல், வளர்ந்து வரும் மாணவரின் எழுச்சி, தங்கள் பிள்ளைகள் நன்கு கற்றுத் தேர்ந்து செயற்கரிய செய்ய வேண்டும் என்ற பெற்றோரின் ஆவல், புதிய கல்வித் திட்டத்தைக் கண்டு கவலையுற்றிருக்கும் பெற்றோர்கள்,—ஆசிரியர்கள்—கல்வி நிபுணர்கள்—அரசியல் அறிஞர்கள், கல்வி, பொருளாதாரத் துறையில் நாடு வளரவேண்டும் என்ற நல்ல எண்ணமுடையோர், 'கல்லக்குடி' டால்மியாபுரமாகக் காட்சி யளிக்கின்றதே என்று கவலையுறும் கல்லக்குடி மக்கள், அவமானம் தாங்கிக்கொள்ள முடியாமல் வருந்தும் நாட்டுப் பற்றுடையோர், நேருவின் இழிச்

காதற் காட்சி

காதலன், தன் அன்பிற்கினிய காதலியை, அவளுடைய தோழியின் உதவியால், மறைவான இடத்தில் பார்த்துப்-பேசி-மகிழ்ந்திருந்துவிட்டுச் செல்லும் களவொழுக்கத்திலே ஈடுபட்டிருக்கிறான். காதலனும் காதலியும், தமக்குள் வளர்ந்துவரும் காதல் உறவை, ஊராரும் பெற்றோரும் அறியாவண்ணம் பாதுகாத்து வருவதில்லை, கண்ணுங் கருத்துமாக இருந்துவருகின்றனர்.

ஊராரெல்லாம் உறங்கும் நள்ளிரவுப் பொழுதே, அவர்கள் இருவரும் கூடிப் பேசுவதற்கு ஏற்ற வேளையாக இருந்துவருகின்றது. அன்றாடம் எங்கு, எந்நேரம் காணலாம் என்பதை, தோழி முன்கூட்டியே தலைவனிடம் அறிந்துகொண்டுவந்து தன் தலைவிக்குக் கூறுவாள். தலைவி குறிப்பிட்ட இடத்திற்குக், குறிப்பிட்ட நேரத்தில் சென்றிருந்து, தலைவனுடைய வருகைக்குக் காத்திருப்பாள். தலைவி குறியிடம் போய்ச் சேர்வதென்றால், அவ்வளவு எளிதாக அமைந்துவிடுவதில்லை. ஊரின் அரவம் அடங்கும் வரையில் காத்திருந்து, பெற்றோர்கள் உறக்கங் கொண்ட பிறகு, மெல்ல நழுவி, மக்கள் நடமாற்றம் அற்ற சந்துபொந்துகளின் வழியே ஒளிந்து மறைந்துசென்று, சந்தடி செய்யாமற் குறியிடம் நோக்கிப் போகவேண்டியிருக்கும். தலைமகனும் யார் கண்ணுக்கும் அகப்படாமல், நாயின் குரைப்பு—காவல்காரர்களின் குரல் ஆகியவற்றிற்குத் தன்னை ஆளாக்கிக்கொள்ளாமல், பெருந் தொல்லைகளுக்கிடையே தலைவியைக் காணவேண்டியிருக்கும்: இப்படிப்பட்ட தொல்லைகளுக்கிடையே ஏற்படும் கூட்டம் (சந்திப்பு) அந்தக் காதலன் காதலியர்க்குப் பேரின்பம் பயப்பதாக இருந்துவருகின்றது.

வழக்கம்போல் ஒருநாள், தன் இன்னுயிர்க் காதலனைக் காண, தலைவி ஆயத்தமாகிறாள். அழகிய ஆடை அணிகளால் தன்னை ஒப்பனை செய்துகொண்டு புறப்படுகிறாள். அதுவோ, உயிரினங்கள் அனைத்தும் உறங்கிக்கொண்டிருக்கும், காரிருள் சூழ்ந்த நள்ளிரவு நேரமாகும் தலைவன் தன்னைக் காணுவதாகக் குறிப்பிட்டிருந்த குறியிடத்தில் வந்து நின்றுகொண்டிருக்கிறாள்.

அப்பொழுது அவளிருக்கும் இடம் நோக்கி ஓருருவம் அசைந்தாடிக்கொண்டு வருகிறது. வருவது தன் உள்ளங்கவர்ந்த காதலனா என்றால், அவனுடைய தோற்றம்போல் அவளுக்குத் தெரியவில்லை. அந்த உருவம் தன்னையே நோக்கி நெருங்கிவருவதைக் கண்டவுடன் சிறிது அச்சங்கொள்கிறாள். என்ன

சொல்லைத் தாங்கிக்கொள்ள முடியாத திராவிடப்பெருங்குடி மக்கள்! "இவர்கள் எல்லோரும் எங்களுக்குச் சாட்சியங்கள்." ஆனால் அவர்கள் எல்லோரும் இங்கே வர இயலாது.

நாங்கள் வெளியே நடமாடினாலும், சிறைக்குள்ளே தள்ளப்பட்டாலும், திராவிடத் தாயகத்தின் விடுதலைக்கான எண்ணங்களிலேதான், எங்கள் சிந்தனையைச் செலுத்துவோம்! எங்கள் நோக்கம் தூய்மையானது, எனவேதான் எங்கள் செயலும் தூய்மையானது என்கிறோம்! திராவிடத் தாயகத்து அரசியல்—பொருளாதார—சமூக விடுதலைக்கான செயல்களிலே ஈடுபடுவது, குற்றம் என்று கருதுகிறது அரசாங்கம்! தாயக விடுதலைக்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டதற்காக மேன்மை தங்கிய நீதிபதி அவர்கள், தண்டனை கொடுக்க முன்வந்தால், "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்று மகிழ்வுடன் ஏற்க இசைகிறேன் என்பதை, பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க திராவிடம்!—வாழ்க தமிழ்!!

செய்வதென்று தோன்றாமல், அவள் திகைத்துக்கொண்டிருக்கும்போது, அந்த உருவம் அவளருகேவந்து நின்றுவிடுகிறது. உருவம் யாருடைய தோற்றம் என்பதை அறிய, சற்று அச்சத்தோடு உற்றுக் கவனிக்கிறாள். அவள் அடிக்கடிப் பார்த்தறிந்த ஒருவன் என்று உணர்ந்தவுடன், சற்றுத் தெளிவும் துணிவும் பெறுகிறாள். அவன்தான், கண்டாரின் நகைப்பிற்கிடமாகி, மொட்டையான தலையுடன், தொழுநோய் படர்ந்த உடலுடன், கருங்தட்டத்தாலே கால்கை குறைந்து, அவள் வாழும் தெருவைவிட்டு அகலாமல், ஒளிந்துதிரியும் முடமாகிய வயதுமுதிர்ந்த பார்ப்பான் என்பதை அவள் நன்கு அடையாளங் கண்டுகொள்கிறாள்.

அந்தக் கிழட்டுப் பார்ப்பான், அங்கு நின்றுகொண்டிருந்த அந்தப் பூங்கொடியாள் அருகே சென்று, அவளைக் குனிந்து உற்றுநோக்கி, "இளம் பெண்கள் வந்து நிற்க அஞ்சும் இந்த நேரத்தில், இந்த இடத்தில், துணிவுடன் நின்றுகொண்டிருக்கும் நீ யார்?...." என்று கேட்கிறான். அவள் மறுமொழி ஏதும் கூறாமல் அப்படியே நின்றுகொண்டிருக்கிறாள். அவன் அவளை நோக்கி, "சிறு பெண்ணே!....நீ என்னிடத்திலே அகப்பட்டுக்கொண்டுவிட்டாய்!.... இங்கிருந்து இனி நீ தப்புவது அரிது" என்று மிரட்டுகிறான். பிறகு அவளிடம் நயந்து பார்ப்போம் என்ற எண்ணத்தில், "பெண்ணே! ....வெற்றிலைப்பாக்குப் போட்டுக்கொள்ளேன்..." என்று சொல்லி, தன் பாக்குப் பையைக்குலுக்கி, அவளிடத்தில் நீட்டி, "நீயே எடுத்துக்கொள்" என்று பல்லிளித்துக்கொண்டு கூறிநிற்கிறான்.

அவள் எதற்கும் மாற்றம் கூறாமல், வாய் மூடிக்கொண்டு, ஆடாமல் அசையாமல் அப்படியே நிற்கிறாள். அவள் வாய்பேசாமல் நிற்கும் நிலையைக்கண்டு, அவன் அஞ்சி, அவள் ஒருக்கால் பிசாசாக இருக்கக்கூடுமோ என்று எண்ணுகிறான். உடனே அவளை விட்டுச் சிறிது ஒதுங்கிநின்று, "நான், பெண் பிசாசாகிய உன்னிலிருந்து வேறுபட்ட ஆண் பிசாசாவேன். என்னை நீ ஏற்றுக்கொண்டு அருள் செய்யவேண்டுகிறேன். அப்படி எனக்கு நீ அருள் செய்யாது போவாயேயானால், இவ்வூரில் நீ பெறும் பலியை நீ பெறாமல் நான் எடுத்துக்கொள்வேன்" என்று அச்சுறுத்துகிறான்.

அந்த முதிய பார்ப்பான், தன்னைப் பெண் பிசாசு என்று கருதி அஞ்சுகிறான் என்பதை, அவனுடைய பேச்சுக்களால் தலைவி அறிந்துகொள்கிறாள். அவனுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த அச்சத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அவனுக்கு நல்ல பாடத்தைக் கற்பிக்கவேண்டும் என்று எண்ணங்கொள்கிறாள்.

தன்னைப் பெண் பிசாசு என்றே அவன் கருதிக்கொள்ளட்டும் என்று நினைத்து, அவள் தன் கையால் மண்ணை அள்ளி அள்ளி விடாமல் அவன்மேல் தூவிக்கொண்டே இருக்கிறாள். அவனோ அவள் பிசாசுதான் என்று நினைத்துக், கதறியழுதுகொண்டே ஓடுகிறான். அவனுடைய கதறல் ஊரெல்லாம் கேட்க, பலர் அவனுக்குப் பாதுகாப்பு அளிக்க ஓடோடியும் வருகிறார்கள். ஊரிலே ஆரவாரம் ஏற்பட்டுவிட்டதைத் தெரிந்துகொண்ட தலைவி, இனி அங்கு நிற்பது ஆகாது என்று கருதித், தன் இல்லம் நோக்கி ஓடி ஒளிந்து மறைந்து சென்றுவிடுகிறாள். ஊரிடத்தே ஏற்பட்ட அமளி, தலைவனையும் குறியிடத்துக்குச் செல்லவொட்டாமற் தடுத்துவிடுகிறது.

மறுநாள் காலை தலைவி தோழியைக் காண்கிறாள். தன் மார்பகத்தோடு உறத்தழுவி மென்மையையும், இனிமையையும் பயக்கும் தலைவனை எதிர்பார்த்துக் குறியிடத்தே காத்துக், கிடந்த தன்மையையும், அங்குக் குட்டநோய்கொண்ட முதுபார்ப்பான் நடத்திக்காட்டிய நாடகத்தையும் விரிவாக நகைப்புணர்ச்சிதோன்ற எடுத்துக் கூறுகிறாள். இந்த நிகழ்ச்சியைக் கேட்டால், ஊராரெல்லாம் நகைக்கவே செய்வார்கள் என்று கூறி, அவன் எப்படித் தன்னிடம் நடந்துகொண்டான் என்பதைக் கூறிக்கொண்டு வரும்பொழுது, "வைக்கோலைக் கண்ட முதிய காளைமாடு, எப்படி அவ்வைக் கோலைவிட்டு அகலாமல், அதனிடத்தே நிற்க விரும்புமோ, அப்படியே அந்த முதிய பார்ப்பானும் என்னைவிட்டு அகலாமல் நின்றான்" என்று உவமையால் விளக்கி நகைப்புண்டாக்குகிறாள். அவனைப்பற்றி மேலும் குறிப்பிடும்போது, "அந்த முதிய பார்ப்பானுக்கு, எந்த நாளும் இதே தொழில்தான். அவன் தனித்து நிற்கும் பெண்களைக் கண்டுவிட்டால் போதும், உடனே தன் காமவேட்கையால் அவர்கள்மேல் விழும்பண்பினன் ஆவான். தோழி! நீகூட அடிக்கடி கூறுவாய், அந்த முதிய பார்ப்பானைப்பேணி.

அவ்னிடம் இரக்கம் காட்டவேண்டும் என்று. நேற்று இரவு அவன் நடத்திய நாடகத்தை நினைத்தால், அவனைப் பேண எப்படி மனம் பிறக்கும்?" என்றெல்லாம் கூறிவிட்டு, "அந்த முதிய பார்ப்பான் செய்த செயல், என் காதலர் குறியிடத்து வந்து என்னைக்காணுங்காட்சி, கெடும்படி செய்துவிட்டது. அது எனக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கிறது" என்று சொல்லி வருந்துகிறாள்.

தான் குறியிடத்துக்குப் போய்க் காதலரைக் காணாமல், குட்டநோய்ப் பார்ப்பானைக் கண்டு விட்டு வந்த செயலைப்பற்றித் தோழியிடம் குறிப்பிட வந்த தலைவி, "ஒன்றிற்கும் அஞ்சாத வலிமையும், வளைந்த கோடுகளையும், மிக்க வீரத்தையும் கொண்ட புலியைப் பிடிப்பதற்காகக் கட்டிவைத்த வலையில், புலியின் பண்பிற்கு முற்றிலும் வேறுபட்ட குள்ளநரி ஒன்று அகப்பட்டதைப் போன்ற தன்மையது, நான் குறியிடத்தில் கண்ட காட்சி" என்று மனம் வருத்திக் கூறுகிறாள்.

"ஆதலால் தோழி! இனி, இரவில் குறியிடம் அமைத்துத், தலைவனைக் காணும் நிகழ்ச்சி அவ்வளவு எளிதில் அமையாது" என்று கூறி தலைவி அமைந்துவிடுகிறாள்.

* * *

இது கபிலரால் பாடப்பட்ட குறிஞ்சிக்கலியைச்சேர்ந்த 29-ம்பாட்டின்கருத்து திருமணம் ஆவதற்குமுன்பே மணமகனும், மணமகளும், ஒருவரையொருவர் கண்டு, ஊரார், உற்றார், உறவினர் ஆகியோர்க்குத் தெரியாவண்ணம், இரவுக்குறி அமைத்துக், களவொழுக்கம் நடத்தும் சிரிய பண்பு, தமிழகத்தில் சிறந்தமுறையில் போற்றப்பட்டு வந்துள்ளது, பண்டை நாட்களில் என்பதற்கு, இச்செய்யுளே நல்ல எடுத்துக்காட்டாகும். காதலனைக் காணவேண்டும் என்ற ஆவலோடு, குறிப்பிட்ட இடத்தில் காத்துக்கொண்டிருக்கும் காதலிக்கு, அவர்களுடைய காதற்காட்சி கெடும்படியாக ஏற்படக்கூடிய பல தொல்லைகளிலே ஒருவகை, இச்செய்யுளால் அழகுறச் சுட்டிக்காட்டப்படுகிறது. "இனி இரவுக்குறி நிகழ்ச்சி இயலாது" என்று தலைவி தோழியிடம் கூறி அத்தோடு முடிப்பதற்குக் காரணம், தலைவியினுடைய உள்ளநிலையைத் தோழியறிந்து, இனிமேல் இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படாமல் தடுக்கவும், விரைவில் மணந்துகொண்டு, வெளிப்படையான குடும்ப வாழ்க்கையை நடத்தவும் முனையவேண்டும் என்று தலைவனை வேண்டிக்கொள்வதற்கேயாகும். விரைவில் திருமணம் நடந்தேறிவிட்டால், களவொழுக்கத்தில் ஏற்படும் தொல்லைகளுக்கு ஆளாக வேண்டிய இன்றியமையாமை ஏற்படாது என்பது தலைவியின் கருத்து. காதற் கலை எவ்வளவு அழகுறப் பேணப்பட்டது என்பதை, இச்செய்யுளால் இனிது அறிந்து இன்பம் பெறலாம்.

* * *

திருந்திழாய் கேளாய்நம் மூர்க்கெல்லாஞ் சாலும்
பெருநகை யல்கல் நிகழ்ந்த தொருநிலையே
மன்பதை யெல்லா மடிந்த விருங்கங்குல்
அந்துகிற் பார்வை யணிபெறத் தைஇநம்
இன்சாயல் மார்பன் குறிநின்றேன் யானாகத்
தீரத் தறைந்த தலையுந்தன் கம்பலும்
காரக் குறைந்து கறைப்பட்டு வந்துநஞ்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானைத்
தோழிநீ போற்றுதி யென்றி யவனாங்கே
பாராக் குறழாப் பணியாப் பொழுதன்றி
யாரிவ ணின்றீ ரெனக்கூறிப் பையென
வைகாண் முதுபகட்டிற் பக்கத்திற் போகாது
தையால் தம்பலந் தின்றியோ வென்றுதன்
பக்கழித்துக் கொண்டீ யெனத்தரலும் யாதொன்
வாய்வாளே னிற்பக் கடிதகன்று கைமாறிக் [றும்
கைப்படுக்கப் பட்டாய் சிறுமிநீ மற்றியான்
ஏனைப் பிசாசரு ளென்னை நலிதரின்
இவ்வூர்ப் பலிநீ பெறுஉமற் கொள்வேன்
எனப்பலவுந் தாங்காது வாய்பாடி நிற்ப
முதுபார்ப்பான், அஞ்சின னாத லறிந்தியா னெஞ்
[சாஅ
ஒருகை மணற்கொண்டு மேற்றூவக் கண்டே
கடிதரற்றிப் பூசல் தொடங்கின னாங்கே
ஒருங்கா வயத்திற் கொடுங்கேழ்க் கடுங்கண்
இரும்புலி கொண்மார் நிறுத்த வலையுளோர்
ஏதில் குறுநரி பட்டற்றாற் காதலன்
காட்சி யழுங்க நம்மூர்க் கெலாஅம்
ஆகுலமாகி விளைந்ததை யென்றுந்தன்
வாழ்க்கை யதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்
வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து.

—[குறிஞ்சிக்கலி-29]

[திருந்திழாய்-நன்கு செய்யப்பட்ட அணியினை உடையாய்; சாலும்-பொருந்தும்; பெருநகை-பெரிய நகைப்பு; அல்கல்-இரவு; மன்

விடுதலைக் கவி ★ ★ ★ ★ பெட்டோபி

மரணத்தை விரும்பி எவரும் அழைப்பதில்லை. ஆனால் அதற்காக மரணம் வராமல் நின்றுவிடுவது கிடையாது. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைப் பாதையிலும் மரண வாயில் குறுக்கிடுகிறது. அது பிறப்பிலிருந்து ஒருநாள் பயணத்துக்குள்ளாகவோ, அல்லது ஒரு நூற்றாண்டுக்குப் பின்போ, நாளைக்கோ அல்லது நாற்பதாண்டுகள் கழித்தோ, என்றோ ஒருநாள் வந்துவிடுகிறது. அந்த வாயிலைக் கடந்தால், இருண்ட வெளி—அதற்குள் சென்ற எவரும் திரும்பி வராத, யாரும் அறியாத பரந்த வெளி கிடக்கிறது.

விரும்பினாலும், வெறுத்தாலும், மரணத்தை யாராலும் தவிர்க்கமுடியாது. ஒருநாள் சந்திக்கத்தான்வேண்டும், முதல் முறையாக அதே சமயத்தில் இறுதிமுறையாக. அந்த வகையில் மரணத்தை எவ்வாறு சந்திப்பது? எத்தகைய சாவைத் தேர்ந்தெடுப்பது? பலருக்குப் பலவிதமான பதில்கள் தோன்றலாம். ஹங்கேரிய நாட்டுக் கவி அலெக்சாண்டர் பெட்டோபி என்பவர் தனது விருப்பத்தை ஒரு கவிதையின்மூலம் தெளிவுபடுத்தினார்.

எவ்வாறு சாவு எனைவந்து அழைக்குமோ!
எண்ணுந் தோறும் ஏங்கிடும் மனம்தான்!
இதழ்கள் உதிர, இனிமை மங்க
வண்ண மலர்கள் வாடிடும் பான்மையோ!
ஆரிருள் பாழ்வெளி, ஆடிடும் தனிச்சுடர்
மெல்ல மெல்ல மயங்கி மறையுமோ!
ஐயகோ! சகியேன் அந்தச் சாவுதனை
இழிதகை முடிவு, பிணியின் தீர்ப்பு
எந்தன் பெயரைத் தொடா திருக்க!
பேரிடி வீழ, பெரும்புயல் வீச,
ஒடிந்திடும் மரம்; புரண்டிடும் கல்லே;

அவைபோல்,
தாங்காத எதிர்ப்பிலே தணிக என் வாழ்வு!
பூட்டிய விலங்குகள் பொடியாகிப் போக
அடிமை மக்கள் ஆர்த்தெழும் வேளையில்
விடுதலைச் சுடர்க்கொடி நெடுவானில் ஆட,
எடுமெனக் கரங்கள் எங்கணும் தாவ,
போர்ப்பறை அதிர, புதுமுரசு இயங்கப்
பேரொலி கூடி நால்வயின் பரவ,
வீரர்கள் சூழ விளங்கிடும் களம்!
அந்தக் களத்தில், அழியாத நேரத்தில்
பிரியும் எந்தன் இன்னுயிர்! ஆங்கே
இதயம் பொழிந்திடும் இரத்த ஊற்றில்,
அமிழ்ந்திடும் எந்தன் உடல்! மற்றும்
அடங்கும் மூச்சில் அடங்காத ஆவல்,
தணிந்திடும் பேச்சில் தணியாத காதல்!
சுழலும் வாட்கள், சுற்றிலும் முழக்கம்,
கழலணி வீரர்கள் களமெங்கும் பெரும்புயல்!
தாவி மேல்வரும் வெற்றிக் குதிரை
இடறிச்செல்லும் என்னுடல் மீது!
சிவந்தே விளங்கும் போர்நிலம், ஆங்கே
சிதறிக் கிடக்கும் என்னெலும்புக் கூடு!

முடிவில்,
என்னருமை நாட்டினர் ஏற்றம் காண்பர்!
உரிமையின் பக்கம் ஓடிவரும் வெற்றிமாலை!

பதை-உயிரினம்; மடிந்த - துயில்கொண்ட; இருங்கங்குல்-மிக்க இருட்டில்; அந்துகில்-அழகிய துணி; தைஇ-உடுத்து; குறி-இரவுக்குறி; கறைபட்டுக் காரக்குறைந்து - கருங்குட்டத்தாலே காலுங்கையுங் குறைந்து; சேரியில்-தெருவில்; பாரா-பார்த்து; குறழா-குனிந்து; பையென-மெல்ல; வைகாண் - வைக்கோலைக் கண்ட; முது பகடு-கிழட்டுக் காளைமாடு; தம் பலம்-வெற்றிலைப்பாக்கு; பக்கு-பை; கடிது-விரைவாக; நலிதரின்-வருந்தச் செய்தால்; பாடி-அலறிக் குழறி (இழிவுதோன்றக் கூறப்பட்டது); அரற்றி-கதறி; கேழ்-ஒளியுள்ள வரிகள்; கடுங்கண்-தறுகண்மை; ஏதில்-அயலதான; அலுகலம்-வருத்தப்; வாழ்க்கை-தொழில்; வீக்கை-விரும்புதல்; கருங்கூத்து - தண்ணிய நாடகம் (காண கருத நகைஉண்டாக்குதலின்)]

—இரா. நெ.

மங்கல நெடுங்கொடி வானுற விளங்க,
மறவர் மகளிர் வாழ்த்தொலி வழங்க,
அந்தக் களத்தில், அழியாத புகழில்
எண்ணற்ற வீரருடன் உறங்குவன் யானும்!
எண்ணற்ற வீரர்கள், எழில்மிகு காளைகள்,
ஏற்றனர் இறப்பினை இருகையும் நீட்டி,
உனக்காக, விடுதலை வேட்கையே!
உலகை விடுவிக்க வந்த உனக்காகவே!

நோய்வாய்ப்பட்டு, இருமலும், கோழையும் கட்டி, மேல்மூச்சுத் தடுமாற, பஞ்சணையில் சாய்ந்து கிடந்து, பஞ்சடைந்த கண்களின் பரிதாபப்பார்வையுடன், மரணத்தைச் சந்திக்கக் கவி பெட்டோபி விரும்பவில்லை. தாயகத்தின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, கடமையை ஆற்றி, வெற்றி காணும் வீரனாகப் போர்க்களத்தில், மரணத்தைச் சந்திக்கவே பெட்டோபி விரும்பினார், இந்தக் கவிதையின்மூலம்.

ஹங்கேரிய நாட்டு இலக்கியத்தில் சிறந்த கவிஞராக விளங்குபவர் பெட்டோபி. அவர் தந்த இசைப்பாடல்கள் பல இன்றும் பெரிதும் பயிலப்படுகின்றன, ஹங்கேரிய நாட்டில் மட்டுமன்றி ஐரோப்பாவில் மற்ற நாடுகளிலுங்கூட. தனது கவிதைகளால், அடிமைப்பட்டுக் கிடந்த ஹங்கேரிய நாட்டில் விடுதலை உணர்வைக் கவி பெட்டோபி உண்டாக்கினார், சோம்பிக் கிடந்த இனத்திற்குப் புதிய எழுச்சியைத் தந்தார். அவர் பாடல்களால் கோழையுள்ளத்தில் வீரம் பிறந்தது, அடிமை நாட்டுக்கு விடுதலை கிடைத்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், நெப்போலியன் வீழ்ச்சியுற்றபின், ஐரோப்பியக் கண்டத்தில் நான்கு பெரும் வல்லரசுகள் ஆதிக்கஞ்செலுத்திவந்தன. அவை பிரான்ஸ், ஆஸ்திரியா, ருஷியா பிரஷியா இவைகளாகும். இவற்றில் வட இத்தாலியும், தென்கிழக்கு ஐரோப்பாவில் பால்கன் நாடுகளில் மேல்பகுதியும் ஆஸ்திரியாவின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டிருந்தன. ஆஸ்திரியாவில் ஹாப்ஸ்பர்க் என்ற அரசகுடும்பத்தினர் ஆண்டுவந்தனர். பிரஷிய நாட்டில் பிஸ்மார்க் என்ற ராஜதந்திரி முதன்மை பெற்றதுபோல, ஆஸ்திரிய அரசியலில் மெட்டர்னிச் என்பவன் ஆதிக்கஞ்செலுத்திவந்தான். அடிமை நாடுகளைக் கட்டியாளுவதில் மெட்டர்னிச்சைப்போன்ற கொடுங்கோலன் இருந்திருக்கமுடியாது.

ஆஸ்திரிய சாம்ராஜ்யத்தில் ஒரு அங்கமாய், வியன்னாவிலிருந்து கிளம்பும் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு ஹங்கேரி வாழ்ந்தது. அந்த இருண்டுகிடந்த நாட்டில் விடுதலைச் சுடரை ஏற்றிவைக்க, கவிஞன் பெட்டோபி தோன்றினான்.

1823-ம் ஆண்டின் முதல் நாள்-அதாவது ஜனவரி 1-ந் தேதி, அலெக்சாண்டர் பெட்டோபி பிறந்தான். அவனுடைய தந்தை பெயர் ஸ்டிபன் பெட்ரோவிக்ஸ் என்பதாகும். பெட்ரோவிக்ஸ் என்பது குடும்பப் பெயர். அது அந்நிய மொழியுடன் கலந்து, சிதைந்திருந்த பெயர். ஆனால் அவர்களின் தாய்மொழியில் தூய்மையான பெயர் பெட்டோபி என்பதாகும். எனவே அலெக்சாண்டர் தன் குடும்பப்பெயரைத் தூய்மையானத் தாய்மொழியில், பெட்டோபி என மாற்றிக்கொண்டான். அலெக்சாண்டர் பெட்டோபி என்பதே, முதற்பெயர் குறுக்கப்பட்டுச் சாண்டர் பெட்டோபி எனவும் வழங்கப்பட்டது.

பெட்டோபி பிறந்து, வளர்ந்தது, சிறு கிராமத்தில். இளம் வயதில் பெட்டோபி பழகிய இயற்கைக் காட்சிகளும், கிராமியப் பண்புகளும் பிற்காலத்தில் அவனுடைய பாடல்களில் பெரிதும் இடம்பெற்றன. பெட்டோபியின் தந்தை ஸ்டிபன் பெட்ரோவிக்ஸ் மிகவும் முரட்டு மனிதர்; தாய் தன்மைக் குணமுடையவள், இசையில் சிறிது பயிற்சியும் பெற்றிருந்தாள். அந்தக் குடும்பம் மிகவும் வசதியுடையதாகக் காணப்படவில்லை. அவர்கள் அடிக்கடி ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்துக்குச் சென்று வாழ்ந்து வந்தனர்.

பத்து வயதில் பெட்டோபி பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டான். இரண்டு ஆண்டுகள் கழித்து, மேல்படிப்புக்காக ஆஸ்கோட் என்ற இடத்திலிருந்த பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டான்.

பள்ளி மாணவனாயிருக்கும்பொழுதே, பெட்டோபி யாருக்கும் அடங்க மறுத்துவந்தான். நாடகங்களிலும், பாட்டுகளிலும் அவனுக்கு ஆர்வமிருந்தது. மேல்படிப்புக்காக அனுப்பப்பட்டபொழுது, அந்த இடத்தில் ஒரு நாடகக் குழு நாடகங்களை நடத்திவந்தனர். பெட்டோபி தவறாமல் அந்த நாடகங்களைப் பார்ப்பதும், நாடகக்காரர்களுடன் நட்பு

பாராட்டிச் சுற்றிக்கொண்டிருப்பதுமாகக் காலங்கழித்து வந்தான். இதைக் கேள்விப்பட்ட தந்தை, அவனைக் கண்டித்தார். பல தடவைகள் கண்டித்தும் பலனில்லாமற்போக, மாதந்தோறும் தான் அனுப்பிவந்த பணத்தை அவர் நிறுத்திவிட்டார்.

என்ன செய்வதென்று புரியாமல், பெட்டோபி ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்ட் நகரை நோக்கிப் புறப்பட்டான், கால்நடையாகவே. மிகவும் கஷ்டப்பட்டு, வறுமையால் நன்ருக வாட்டப்பட்ட நிலையில் பெட்டோபி புடாபெஸ்ட் நகர் வந்தடைந்தான். அங்கு வேலை தேடிச் சுற்றிவருகையில், ஒருநாள் தன் தந்தையைத் திடீரென்று சந்தித்துவிட்டான். அவரிடமிருந்து தப்பி ஓடி, அந்த நகரில் நாடகங்களை நடத்திக்கொண்டிருந்த நாடகக் குழு ஒன்றில் சேர்ந்துகொண்டான். அந்த நாடகசபையில் பெட்டோபி எல்லாவிதமான வேலைகளையும் செய்துவந்தான். பகலில் ஒவ்வொரு நடிகருக்கும் வேண்டிய பாடங்களை எழுதி, அவர்கள் தங்கியிருக்கும் இடங்களுக்குப் போய்க் கொடுத்துவருவது, இரவில் வேஷம் போட்டுக்கொண்டு நாடகங்களில் சில்லரை பாகங்களில் தோன்றுவது இப்படியாக இருந்தான். நாடகமேடையில், பேச்சு எதுவுமில்லாமல் வேஷத்துடன் தோன்றி, திரை விட்டதும் உள்ளே போய்விடும்படியான கூட்டத்தில் தான் பெட்டோபி இருந்தான்.

சிலகாலம் அந்த நாடகக்குழுவில் அவதிப்பட்டபின், அவருடைய உறவினர் ஒருவர் அழைப்பை ஏற்று, அவருடன் போய் வாழ்ந்தான். இந்த உறவினர் நல்ல வசதியுடையவராக இருந்ததால், பெட்டோபிக்கு அமைதியும், உல்லாசமும் மிகுந்த வாழ்வு கிடைத்தது. இந்தச் சமயத்தில்தான் பெட்டோபி லத்தின் இலக்கியங்களைப் படித்து, தானாகவே கவிதைகளை எழுத ஆரம்பித்தான். அவனுடைய உறவினருக்கு, பெட்டோபியைத் திருத்த முடியும் என்ற நம்பிக்கைப் போய்விட்டது. பெட்டோபி எதற்கும் உதவாத ஒரு கோமாளி என முடிவுகட்டினர். அதன் பலன், மறுபடியும் திக்கற்ற நிலையில் பெட்டோபி விடப்பட்டான். வறுமையைச் சமாளிக்க வேறு வழியின்றி, பெட்டோபி சேனையில் சேர்ந்தான், அப்பொழுது அவனுக்கு வயது பதினாறு.

பெட்டோபியின் மனப்போக்குக்கும், படையமைப்பு முறைகளுக்கும் சிறிதுகூட ஒத்துவரவில்லை. எதேச்சையாக, எவ்விதக் கட்டுப்பாடுமின்றி வாழவிரும்பிய பெட்டோபிக்கு, அங்கு காணப்படும் கடுமையான ஒழுங்கு, சிறைவாசத்தைத் தருவதுபோலிருந்தது. மேலும் இளம் வயதில், போர்வீரர்களின் முரட்டு வாழ்க்கை ஒத்துக்கொள்ளவில்லை. துன்பமும், கடுமையும் வாட்டிய நேரங்களில் கவிதைகளைப் படிப்பதும், எழுதுவதும்தான் பெட்டோபிக்கு ஆறுதலளித்தன. தன் நண்பனுக்கு எழுதிய கடிதமொன்றில், "உயர்ந்த கவிதைகளின் உதவியால், இந்த வேதனையிலிருந்து நான் அவ்வப்பொழுது விடுவிக்கப்படுகிறேன். என் உள்ளத்தைக் கவர்ந்த இக்கவிதைச் செல்வத்தை நான் பெறுதிருந்தால், நான் படும் துன்பங்கள் என்றோ என்னைக் கொன்றிருக்கும்" என எழுதினன். பனிக்கட்டி உறைந்துவிடும் மாரிக்காலத்திலும், வெளியில் அங்குமிங்கும் நடமாடி பல வேலைகளைச் செய்யவேண்டியிருந்தது. அதனால் பெட்டோபிக்கு முறைக்காய்ச்சல் வந்து படுத்த படுக்கையானன். அதனுல் உடல்நிலை மிகவும் மோசமாகி, டாக்டரால் பரிசோதிக்கப்பட்டு, படையிலிருந்து விடுவிக்கப்பட்டான்.

சேனையிலிருந்து விடுதலை பெற்றபின், பெட்டோபி தலைநகருக்கு வந்துசேர்ந்தான். அப்பொழுது அவனுக்கு வயது பதினெட்டு. மறுபடியும் படிக்கவேண்டுமென்ற ஆவலுடன், கல்லூரி ஒன்றில் சேர்ந்தான். ஆனல் அவனுடைய உள்ளத்தைக் கவர்ந்திருந்த மற்றொரு ஆவலான நாடகம், அவனது கவனத்தை வேறுவகையில் ஈர்த்தது. கல்லூரியில் படிக்கும்பொழுது, நாடகங்கள் எழுதத் தலைப்பட்டான். இத்துடன் பிரெஞ்சு, ஆங்கில நாவல்களையும் மொழிபெயர்த்துவந்தான். இதனுல் வரும் சிறு ஊதியமும் அவனுக்கு உதவியாக இருந்தது.

கல்லூரிப் படிப்பு முற்றுப்பெறுவதற்குமுன், நாடகங்களில் நடிக்க பெட்டோபி ஆரம்பித்தான். பிறகு கல்லூரியை விட்டு, சிறு நாடகக் குழுக்களுடன் சேர்ந்து, கிராமங்கள்தோறும் சுற்றிவரும் நாடோடி நடிகனுனன். வயற்புறம், ஆற்றோரம், குதிரைக்கொட்டடி, சந்தைக் கடை, இப்படி எல்லாவிடங்களிலும் பெட்டோபியின் நாடகவாழ்வு பரவிக்கிடந்தது.

ஆனல் வசதியற்ற நாடோடி வாழ்க்கைமுறை வெகு நாளைக்கு நீடிக்கவில்லை. உயிருக்கே ஆபத்துவிளைவிக்கும் வகையில், மிகவும் கடுமையான பிணிவாய்ப்பட்டு, பெட்டோபி படுத்த படுக்கையானுன்.

வறுமையும், நோயும் ஒருங்கே தாக்க, தங்க இடமும், சரியான பாதுகாப்பும் இன்றி பெட்டோபி கஷ்டப்பட்டான். முதலில் ஒரு நண்பனுடனும், பின் தனியாக ஒரு சிறு அறையிலும் அவன் தங்கியிருந்தான். படுக்கையிலிருக்கும்பொழுது, பெட்டோபி சில கவிதைகளை எழுதினுன். அவன் தங்கியிருந்த அறையிலிருந்து வெளியே பார்த்தால், அந்த ஊரின் தூக்குமேடை தெரியும். எத்தகைய இன்பந் தரும்காட்சி! பிணியாளன், படுக்கையிலிருந்து எழுந்துபார்த்தால் வெளியே ஊசலாடும் தூக்குக்கயிறு மனதிலிருந்த உறுதியே பெட்டோபியை வாழவைத்தது எனக்கூறலாம்.

கடைசியாக படுக்கையை விட்டெழுந்து, பெட்டோபி நடமாட ஆரம்பித்தான். பிணியிலிருந்து அவன் விடுபட்டானேயொழிய, வறுமையிலிருந்து அவன் விடுபடவில்லை. பிழைக்க வழி தேடவேண்டி, மறுபடியும் புடாபெஸ்ட் நகரைநோக்கிப் புறப்பட்டான், எலும்புந் தோலுமாக இருந்த பெட்டோபி.

மாரிக்காலம். பொறுக்க முடியாத குளிர் வீசிக்கொண்டிருந்தது. பனிமூடிய பாதையில் தள்ளாடியவண்ணம் பெட்டோபி நடந்து சென்றுகொண்டிருந்தான். அவனுடைய உடைகள் கிழிந்தும், அழுக்கடைந்தும் இருந்தன. சட்டையின் ஒரு பையில் சில செப்புக் காசுகளும், மற்ெருரு பையில் அவன் நோய் வாய்ப்பட்டபொழுது எழுதிய கவிதைகளும் இருந்தன. அவனுடைய நம்பிக்கைகளெல்லாம் அந்தக் கவிதைகளின்மீதுதான் கட்டப்பட்டிருந்தன. அவைகளைப் பதிப்பாளர் யாராவது வாங்கிக்கொண்டு, ஏதாவது கொடுத்தால்தான், பெட்டோபியால் உயிர்வாழ முடியும், இல்லையேல் பசியால் வாடி, பனியில் விறைத்து மடியவேண்டியதுதான். சோகமயமான அந்தப் பயணத்தைப்பற்றி பெட்டோபி எழுதிய கடிதமொன்றில், "பாதையில் நான் மாத்திரம் தனிமையாகச் சென்றுகொண்டிருந்தேன். சுற்றிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை எதுவும் புலப்படவில்லை. என்னைத்தவிர, மற்ற எல்லா உயிரினங்களும், ஒவ்வொரு பாதுகாப்பான இடத்தில் தங்கிவிட்டன. காற்றையும், குளிரையும் தாங்கிக்கொண்டு, நடந்தவண்ணமிருந்தேன். ஒரு சமயம் மேற்கொண்டு செல்லமுடியாமல் நின்றேன். பலமான பனிக்காற்று வீசி, கண்ணையும் கருத்தையும் மழுங்கச்செய்தது. முகத்தின்மீது பொறுக்கமுடியாத குளிர், உள்ளத்திலோ தாங்கமுடியாத வேதனை. கண்களில் கண்ணீர் புரண்டது. ஆனல் அதிகமான அளவு குளிர் இருந்ததால், கன்னத்தில் வழிந்த கண்ணீர் பனித்துளிகளாக உறைந்துவிட்டன" எனக் குறிப்பிட்டுள்ளது.

கடைசியாக பெட்டோபி தலைநகரை வந்தடைந்தான். நகரிலிருந்த பல பதிப்பாளர்களைக் கண்டும், அவன் எதிர்பார்த்தபடி அவனுடைய கவிதைகளை வாங்குவாரைக் காண முடியவில்லை. அந்தச் சமயத்தில், அரசாங்கத்தின் தடையுத்தரவுகள் பலமாக இருந்ததால், புதிய கவிதைகளையோ, புது நூல்களையோ வெளியிட எல்லோரும் அஞ்சியபடி இருந்தனர். வெளியிடுவதில் ஏதாவது அரசாங்கத்துக்குக் குற்றங்குறையாக இருந்தால், பதிப்பாளருக்குக் கடுமையான தண்டனை கிடைப்பதுடன், அச்சிடப்பட்ட அச்சகம் அரசாங்கத்தால் மூடப்பட்டுவிடும். எனவே புதுக்கவிதைகளை வெளியிட எவரும் முன்வரவில்லை. பெட்டோபி நம்பிக்கை வெல்லாவற்றையும் இழந்தான். வாழ்வின் இறுதிக்காலம் வந்துவிட்டதாகவேத் தோன்றியது. கடைசியாக, அப்பொழுது ஹங்கேரிய நாட்டின் பெரும் கவிஞர் எனப் போற்றப்பட்ட வராய்ஸ்மார்தி என்பவரின் ஞாபகம் அவனுக்கு வந்தது. கடைசி முயற்சியாக அவரிடமும் செல்லத்துணிந்தான், கடைசிக் காசை வைத்துச் சூதாடுபவனுக்கு உண்டாகும் வெறியுணர்ச்சியுடன். அவர் உதவினுல் வாழ்வு, இல்லையேல் சாவு.

அலைந்து திரிந்துவந்த ஏழையின் கவிதைகளை வராய்ஸ்மார்தி படித்துப்பார்த்தார். உடனே பெட்டோபிக்குத் தக்க உதவியளித்துக் காப்பாற்றினர். அந்தத் தலைநகரில் ஏராளமான பதிப்பாளர்களும், புரவலர்களும், கவிதா ரசிகர்களும், இலக்கிய விமரிசகர்களும் இருந்தபோதிலும், பெட்டோபியின் கவிதைகளின்

பெருமையை உணர மற்றொரு கவிஞனால்தான் முடிந்தது.

வாய்ஸ்மர்தியின் உதவியால், பெட்டோபி யின் கவிதைகள் 1844-ம் ஆண்டு வெளியிடப் பட்டன. அப்பொழுது பெட்டோபிக்கு வயது 21-தான் ஆனது. கவிதைகள் வெளிவந்ததும் பெட்டோபியின் புகழ் பரவ ஆரம்பித்தது. அவனுடைய கவிதைத் தன்மை எல்லோராலும் பாராட்டப் பெற்றது. இலக்கிய வானில் புதிய நட்சத்திரம் தோன்றியுள்ளதெனக் கொண் டாடினார்கள். ஹங்கேரிய நாட்டுக் கவிஞர் களின் முதல் வரிசையில் பெட்டோபிக்கு இடந்தரப்பட்டது.

அவரை வாட்டிக் கொண்டிருந்த வறுமை ஓரளவுக்கு நீங்கியது. வாழ்க்கையில் சிறிது வசதிகள் கிடைத்ததுடன், கவிதைகளும் கட் டுரைகளும் எழுதுவதற்கான ஓய்வும், உற்சாக மும் அவருக்கு வந்தன. 1847-ல் அவருடைய 24-ம் வயதில் ஜூலியா சேசண்டிரி என்ற மங்கையை மணந்தார். அவளும் கவிதை மனப் பாங்கு பெற்றிருந்ததால், பெட்டோபியின் காதல் வாழ்வு, கருத்தொருமித்து அமைதி யும் இன்பமும் குடிகொண்டதாயிருந்தது.

அடிமைப்பட்டிருந்த தாயகத்தை மீட்க, பெட்டோபி தம் கவிதைகளைத் தீட்டினார். நாட்டின் வீழ்ச்சியுற்ற நிலையை விளக்கி, விடு தலைப் போருக்கு மக்களைத் தூண்டும் வகையில் அவரது கவிதைகள் அமைந்திருந்தன. 1848-ல் "தாயகம்" என்ற கவிதையொன்றை எழுதி னார். அதில் தமது இனப் பெருமை, பண் டைய வீரம், வரலாற்றுப் புகழ், பின் அன் னியருக்கு அடிமைப்பட்ட அவல நிலை இவை களைப்பற்றிக் கூறியபின், கடைசி இரண்டு பாட்டுகளில் விடுதலைப்போர் அண்மையில்வந்து விட்டதெனவும் கூறியுள்ளார்.

"வரண்டு ஏக்கமுற்ற கண்கள்; அவைதாம்
சுரந்து சிதறின கண்ணீர் இன்று.
வீழ்ந்த கண்ணீர் விடுதலைக் காலைச்
சிந்திய பல்லிதழ் பனிநீர்த் துளிகளாம்.

*   *   *

ஒளிவிடும் விண்மீன் வருவது உறுதி;
சூழ்ந்திடும் இருளும் போவது உறுதி.
ஒளிவிட, சுடர்விட, வந்திடும் நன்னாள்
தாயகம் வாழ்த்திட வந்திடும் பெருநாள்.

பெட்டோபியின் கவிதைக்கு நாட்டில் எதி ரொலி, வராமற் போகவில்லை. கவி வரவேண் டுமென வாழ்த்துக் கூறிய நன்னாள் வெகு விரைவிலேயே வந்தது.

1848-ல் ஐரோப்பாவெங்கும் புரட்சி வாடை வீசியது. ஒவ்வொரு நாட்டிலும், கொடுமைக் காளான மக்கள் ஆதிக்கக்காரர்களுக்கு எதிராக எழுந்தனர். மகுடங்கள் சாய்ந்தன, மன்னர் கள் நாடுவிட்டோடினர். முதலில் பாரிஸில் புரட்சி தலை தூக்கியது. நெப்போலியனுக்குப் பின், பிரான்சை ஆண்டு வந்த லூயி மன்னன் பரம்பரை, தலைநகரைவிட்டு ஓடியது. மக் களின் அரசு இரண்டாவது முறையாக, பிரான் சில் ஆரம்பித்தது. ஆஸ்திரிய சாம்ராஜ்யத் தில், புரட்சி முதலில் தலைநகரான வியன்னாவி லேயே தோன்றியது. வியன்னாவில் புரட்சி மூண்டதென்ற செய்தி 1848 மார்ச் 14-ந் தேதி ஹங்கேரியத் தலைநகருக்கு எட்டியது. அந்தச் செய்தி, காத்துக்கிடந்த பெட்டோபி யின் உள்ளத்தில் நம்பிக்கையையும், எழுச்சி யையும் ஊட்டியது. மறுநாள் மாபெரும் கூட்டமொன்றில், பெட்டோபி புரட்சிக்கு வாழ்த்துக்கூறி, கவிதை ஒன்றைப் படித்தார்.

"எழுவீர் வீரர்களே! தாயகம் அழைக்கிறது!
விடுதலை வந்தது, விலங்குகளை ஒடிப்பீர்!
அடிமைத் தளையா? விடுதலை வாழ்வா?
எதுவெனக் கேட்கும் நன்னாள் வந்தது.
உறுதிகொள்வோம், உறுதிகொள்வோம்.
அடிமைகள் ஆகோமென உறுதிகொள்வோம்"

இந்த ஆரம்பத்தையுடைய புரட்சிக் கவிதை யொன்றைப் பெட்டோபி பாடினார். கூடியிருந்த மக்கள், அவரைத் தொடர்ந்து ஒவ்வொரு அடியின் பின்னும் 'அடிமைகள் ஆகோமென உறுதிகொள்வோம்' எனப் பேரொலி எழுப்பி னார்கள். கவியின்முன் நாட்டுமக்கள் சபதம் எடுத்துக்கொள்வதுபோலிருந்தது. உணர்ச்சி வயப்பட்ட மக்கள் கூட்டம், அந்தப் பாட் டைப் பாடிக்கொண்டே செல்லும்பொழுது, அரசாங்கத்தாரால் தடைசெய்யப்பட்டு மூடிக் கிடந்த அச்சுக்கூடம் ஒன்று அவர்கள் கண்க ளில்பட்டது. உடனே மக்கள் அரசாங்கத்தின் தடையை மீறி, கதவுகளைத் திறந்து, தாங்க ளாகவே இயந்திரங்களை ஓட்டி, எழுத்துக் களைக் கோர்த்து, பெட்டோபியின் புரட்சிக் கவிதையை அச்சடிக்க ஆரம்பித்தனர். பெட் டோபியின் கவிதை மறுநாள் ஆயிரக்கணக்

கான மக்களால், நாட்டின் நான்கு திக்கிலும் பாடப்பட்டது.

இதுதான் முதல் தடவை, அரசாங்கத்தின் பரிசீலனையையும், அனுமதியையும் பெறாமல், ஹங்கேரி நாட்டில் கவிதையொன்று அச்சிடப் பட்டது.

பெட்டோபியின் கவிதை ஹங்கேரியின் விடுதலைக் கூரலாயிற்று. நாடெங்கும் புரட்சி ஆர்வம் வலுத்தது. தலைநகரில் ஆஸ்திரியாவுக்கு எதிராகப் புரட்சி கிளம்பியது. ஆஸ்திரிய அரசாங்கம் பெரும் பட்டாளங்களை அனுப்பியது. வீதிகள் ரணகளமாயின, வீடுகள் பாசறைக் கூடங்களாயின, அடங்கிக்கிடந்த மக்கள் போர்வீரர்களாகக் காட்சியளித்தனர்.

லாஜஸ் கோஸத் என்பவரின் தலைமையின் கீழ் ஹங்கேரிய விடுதலைப்படை திரள ஆரம்பித்தது. கோஸத்திற்கு அடுத்தபடி முக்கியமாக இருந்தவர் பெட்டோபியாகும்.

பெட்டோபி ஒரு கவிஞனாக மட்டும் இருந்துவிடவில்லை. புரட்சிக் கருத்துக்களைப் பரப்ப, ஒரு பத்திரிக்கையின் உதவி ஆசிரியராகவும், அத்துடன் நாடெங்கும் சென்று விடுதலைப் போருக்கு மக்களை அழைக்கும் சொற்பொழிவாளராகவும் பெட்டோபி மாறினார். தாயகத்தின் விடுதலையைக்காண பெட்டோபி எந்த வகையிலும் தயாராக இருந்தார். அவரது கவிதையும், இசையும், எழுத்தும், பேச்சும் விடுதலைச் சுடரை மக்கள் இதயங்களில் ஏற்றி வைத்தன.

ஐரோப்பாவில் மற்ற இடங்களில் தோன்றிய புரட்சிகள் இரத்தத்தில் அமிழ்த்தப்பட்டு விட்டன. ஆனால் ஹங்கேரி மட்டும் தனியாக நின்று போராடியது. ஆஸ்திரியாப் படைகளுக்கு உதவியாக, ருஷியாவின் ஜாரரசன் படைகளும் ஹங்கேரியின்மீது படையெடுத்து, விடுதலைப் படைகளைத் தாக்கின.

இந்த நிலையில் பேனாவைப் பிடித்து எழுதிக்கொண்டிருப்பது பெட்டோபிக்குப் பிடிக்கவில்லை. தன் இளமனைவியிடம் விடைபெற்றுக்கொண்டு, விடுதலைப் படையில் போர்வீரனாகச் சேர்ந்து, ஆஸ்திரியா படைகளை எதிர்த்துச் சென்றார்.

போர்க்களத்தில் அவர் காட்டிய தீரத்தால், படைவரிசையில் அவருக்கு நல்ல மதிப்பு உண்டானது. சாதாரண வீரனாகச் சேர்ந்த அவர், தமது சொந்த முயற்சியால் காப்டன் பதவி வரை உயர்ந்துவந்தார்.

பெட்டோபி இருந்த படை, பலமான தாக்குதலுக்கு ஆளாகியது. சேகேஸ்வர் என்ற இடத்தில் இரண்டு படைகளும் கைகலந்தன. வெற்றி தோல்வியின்றிப் போரின் முடிவு ஊசலாடியது.

கடும்போரின் மத்தியில், வாளால் தாக்கப்பட்டக்காயங்களுடன், பெட்டோபி மண்ணில் சாய்ந்தார். அவர் உடலிலிருந்து இரத்தம் வழிந்தது, புன்னகை பூத்த முகத்துடன், கடமையைச் செய்தோம் என்ற உணர்வுடன், அவரின் தலை நிமிர்ந்து வீழ்ந்தது, விடுதலைக் கவி பெட்டோபி இறந்தார்.

அவர் உயிர்துறந்தது, சேகேஸ்வர் என்ற போர்க்களத்தில், 1849-ம் ஆண்டு ஜூலை 31ம் தேதி. அப்பொழுது அவருக்கு வயது 26.

நோய்வாய்ப்பட்டு சாகக்கூடாது. நாட்டை மீட்கும் புனிதப்போரில் அமர்க்களத்தில் உயிர் துறக்கவேண்டுமென்று அவர்கண்ட கனவு, பாடிய கவிதை, நனவாயின. அவர் பாடிய வண்ணமே, அவருடைய உடலும், மற்ற வீரர்களுடன் சமமாக, சாதாரணப் புதைகுழியில் மூடப்பட்டது.

பெட்டோபி, ஒரு கவிஞன், நாடகமாடுபவன், எழுத்தாளன், சொற்பொழிவாளன், போர்வீரன். தாயகத்தின் அடிமைத்தளையை அறுக்கப்பாடுபட்டான். அதற்காக நடந்த விடுதலைப்போரில் உயிர்துறந்தான். அவன் வாழ்ந்தது, 26 ஆண்டுகள்தாம். அதற்குள் பல நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடந்த இனத்தைத் தட்டியெழுப்ப முடிந்தது. அவன் கவிதைகள் எழுதியது, 5 அல்லது 6 ஆண்டுகள்தாம். அதற்குள் ஹங்கேரிய நாட்டிலும், உலக இலக்கியத்திலும் பெரிதும் போற்றப்படும் இசைப்பாடல்கள் பலவற்றைத் தந்துவிட்டுச் சென்றான். பெட்டோபியைப்பற்றிக் குறிப்பிடும்போது, விடுதலைக்கவி, பெட்டோபி என பிரெஞ்சுக் கவி விக்டர் ஹியுகோ அழைத்தார். ஹங்கேரிய இலக்கியத்தின் உயர்தரக்கவிஞனாக மட்டுமல்லாமல், அந்த நாட்டின் விடுதலைப்போராட்டத்தின் பிரதிநிதியாகவும் அலெக்சாண்டர் பெட்டோபி விளங்குகிறார்.

—இரா. செழியன்

●●●

Regd. No. M 6290

"மன்றம்" வெளியீடுகள்

★ ★ ★

கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்
—இரா. நெடுஞ்செழியன் M. A. — விலை ரூ. 0—12—0

ராஜாதி ராஜா!
இரா. செழியன் M. A. — விலை ரூ. 0—12—0

பொது அறிவு
—இரா. செழியன் M. A. — விலை ரூ. 0—8—0

மறைந்த திராவிடம்
—இரா. நெடுஞ்செழியன் M. A. — விலை ரூ. 0—3—0

- ரூ. 10-க்கு மேல் வாங்குவோர்க்கே விற்பனைக் கழிவு.
- விற்பனைக் கழிவு 25 சதவிகிதம்.
- முன்பணம் அனுப்புவோர்க்கே புத்தக அஞ்சலில் அனுப்பிவைக்கப்பெறும்.
- வி. பி. யில் வேண்டுவோர் வி. பி. கட்டணம் தனியே செலுத்த வேண்டும்.

விவரங்கட்கு :— நிர்வாகி, "மன்றம்"
26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1.

விற்பனையாளர்க்கு

விற்பனையாளரில் பெரும்பாலோர், தாங்கள் தொடக்கத்தில் கொடுத்த வாக்குறுதிகளை அறவே மறந்துவிட்டு, கண்ணியக் குறைவாக நடந்து கொள்வதைக் கண்டு மிக வருந்துகிறோம். அப்போதைக்கப்போது பாக்கித் தங்காத வகையில், பட்டியல் தொகையை அனுப்பி வைக்க வேண்டுகிறோம். பட்டியல் தொகை முன் கூட்டியே வந்து சேராவிடில், இதழ்கள் அனுப்பப்படுவது நிறுத்தப்படும் என்பதை உறுதியாய்த் தெரிவித்துக் கொள்கிறோம். மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் மூலமாக மட்டுமே தொகையை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி,
"மன்றம்"

'மன்றம்' விற்பனையாளர்

பம்பாய்:
R. V. சுப்பையா,
9, S. M. சால்,
தாராவி,
பம்பாய்-17.

மன்றம் கட்டண விவரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு மாதம்	3—0—0	3—12—0
தனி இதழ்	0—4—0	0—5—0

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.